வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu




Email : news@eelanadu.lk | மலர் : 01 | 23.07.2021 வெள்ளிக்கிழமை | இதழ் : 232 | பக்கங்கள் : 16

## மன்னாரில் ஒருவர் கொரோனாவால் உயிரிழப்பு!

மன்னார், ஜூலை 23

மன்னாரில் உயிரிழந்த வயோதிபப் பெண் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

72 வயதுடைய வயோதிப் பெண் ஒருவர் உயிரிழந்த நிலையில் மன் 15

## முல்லைத்தீவு யுவதியை காணவில்லை!

முல்லைத்தீவு, ஜூலை 23

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் தென்னியங்குளம் கிராமத்தில் பெற்றோருடன் வசித்து வந்த யுவதி ஒருவர் காணாமல் போயிருப்பதாக அவரது தாயாரால் மல்லாவி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசாரணைகளை மல்லாவி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.



## இணையவழி கற்பித்தலை புறக்கணிக்கும் ஆசிரியர்களின் போராட்டம் தொடர்கிறது

கொழும்பு, ஜூலை 23

மாணவர்களுக்கான இணையவழிக் கற்பித்தல் நடவடிக்கையில் பங்கேற்காமல் தொடங்கப்பட்ட தொழிற்சங்க நடவடிக்கையைத் தொடர ஆசிரியர் தொழிற்சங்கங்கள் முடிவு செய்துள்ளன.

நேற்று கொழும்பு கோட்டை 15

## நாட்டில் 4,000ஐ நெருங்கிய கொரோனா பலியெடுப்பு!

கொழும்பு, ஜூலை 23

நாட்டில் நேற்றுமுன்தினம் கோவிட் தொற்றால் 42 பேர் உயிரிழந்துள்ளனர் என அரசாங்க தகவல் திணைக்களம் தகவல் வெளியிட்டுள்ளது.

இதன்படி நாட்டில் பதிவான கோவிட் மரணங்களின் மொத்த எண்ணிக்கை 3,959 ஆக அதிகரித்துள்ளது. இவ்வாறு உயிரிழந்தவர்களில் 17 பெண்களும் 25 ஆண்களும் உள்ளடங்குகின்றனர்.

## மேலும் 1,721 பேருக்கு நேற்று தொற்று உறுதி!

கொழும்பு, ஜூலை 23

கொரோனா தொற்றால் மேலும் 1,721 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்படி நாட்டில் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 291,298ஆக அதிகரித்துள்ளதுடன்,கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 997 பேர் நேற்று குணமடைந்து வீடு திரும்பினர்.

## யாழில் பிறந்து 17 நாள்களேயான பச்சிளங்குழந்தைக்கு தொற்று!

யாழ்ப்பாணம், ஜூலை 23

யாழ்ப்பாணத்தில் பிறந்து 17 நாள்களேயான பச்சிளங்குழந்தை ஒன்றுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் தனிமைப் படுத்தல் விடுதியில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த பெண் குழந்தைக்கு நேற்று யாழ்.போதனா வைத்தியசாலையில் பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இதன்போது குறித்த குழந்தைக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என்று மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ‘திருமண கொத்தணி’ ஏற்படலாம்!



### சவேந்திர சில்வா எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 23

திருமணங்களை நடத்தும்போது பொது மக்கள் சுகாதார வழிகாட்டுதல்களைக் கடைப்பிடிக்காவிட்டால், ‘திருமணக் கொத் தணி’ ஏற்பட வாய்ப்புள்ளது என்று இராணுவ தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா எச்சரித்துள்ளார். 15

## திருமண நிகழ்வுகளை இன்று முதல் சுகாதார பரிசோதகர் கண்காணிப்பர்

கொழும்பு, ஜூலை 23

அனைத்து திருமண நிகழ்வுகளும் இன்று முதல் பொதுச் சுகாதார பரிசோதகரினால் பரிசோதிக்கப்படும் என்று இலங்கை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

தனிமைப்படுத்தப்பட்ட விதிமுறைகளை மீறியதாகக் கண்டறியப்பட்டால், திருமணத்தின் ஏற்பாட்டாளர்கள் மற்றும் மண்டப நிர்வாகம் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்தார்.

## ரிஷாத்தின் வீட்டில் விசேட சோதனை

### மனைவியிடமும் வாக்குமூலம்

கொழும்பு, ஜூலை 23

டயகம சிறுமி ஹிஷாலினியின் மரணம் தொடர்பில் ரிஷாட் பதியுதீனின் மனைவி உட்பட மூவரிடம் பொரளை பொலிஸார் வாக்குமூலம் பெற்றுள்ளனர்.

அத்துடன், ரிஷாத் பதியுதீனின் வீடும் நேற்று பொலிஸாரால் விசேட சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

சிறுமி தங்கியிருந்த பகுதி, சம்பவம் இடம்பெற்ற இடம் உட்பட சில இடங்கள் கண்காணிக்கப்பட்டுள்ளன.

ரிஷாத் பதியுதீனின் வீட்டில் வேலை செய்த நிலையில் சந்தேகத்துக்கிடமான முறையில் டயகம சிறுமி உயிரிழந்த சம் 15

## கொக்குவில் குளப்பிட்டி சந்தியில் வன்முறையில் ஈடுபட்ட மூவர் கைது!

யாழ்ப்பாணம், ஜூலை 23

கொக்குவில் குளப்பிட்டிச் சந்தியில் உள்ள வர்த்தக நிலையத்தில் நேற்று முன் தினம் இரவு வன்முறையில் ஈடுபட்ட மூவர் கைது செய்யப்பட்டுள்ளதோடு கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து வாள் ஒன்றும் வன்முறைச் சம்பவத்துக்கு பயன்படுத்திய மோட்டார் சைக்கிள் ஒன்றும் மீட்கப்பட்டுள்ளதாக 15

## வர்த்தக நடவடிக்கைகளுக்கு இலங்கை சவாலான நாடு

### சுட்டிக்காட்டுகின்றது அமெரிக்கா

வாஷிங்டன், ஜூலை 23

வர்த்தக நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு இலங்கை சவாலான நாடு என அமெரிக்கா தெரிவித்துள்ளது. 2021 முதலீட்டு சூழல் 15

## இப்படியும் நடக்கிறது...!

ஓர் ஊரில் பணக்காரர் ஒருவர் வசித்து வந்தார்.

தன் வேலைக்காரனை எப்பொழுதும் சந்தேகத்து டன் விசாரித்து வருவது அவரின் வழக்கம். ஒரு நாள் வேலைக் காரனிடம் ஐநாறு ரூபாயைக் கொடுத்து சமையல் செய்வதற்கு தேவையான எண்ணெய்யை வாங்கி வரச் சொன்னார்.

வேலைக்காரனும் கடைக்குச் சென்று ஐநாறு ரூபாய்க்கு எண்ணெய் போத்தல் ஒன்றை வாங்கி வந்தான். வியர்த்து விறுவிறுத்து வீட்டிற்குள் நுழைந்த அவனை சந்தேகத்துடன் பார்த்த பணக்காரர், ஏன் இப்படி பயந்து நடுங்குகிறாய் என்று கேட்டு, எண்ணெய் போத்தலைப் பார்த்தார்.

எண்ணெய் சிறிது குறைவாக இருந்தது. ஏன் என்று கேட்டார். அதற்கு வேலைக்காரன், போத்தலின் அடியில் சிறிய ஓட்டை இருந்தது. அதனை விரலால் பொத்திக் கொண்டுவந்தேன். ஆனாலும் கொஞ்சம் கீழே வழிந்து விட்டது என்று கூறினான். அதற்கு பணக்காரர், கீழே ஓட்டை என்றால் கீழே தானே குறைந்திருக்க வேண்டும், எப்படி மேலே குறைந்தது என்று கத்தினார்.

வடக்கு மாகாண பிரதம செயலாளர் நியமனம் குறித்து சில தினங்களுக்கு முன்னரும் இந்தப் பத்தியில் குறிப்பிட்டிருந்தோம்.

அந்தப் பதவிக்கு அப்போது பெரும்பான்மை இனத் தைச் சேர்ந்த ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். பத்திற் கும் மேற்பட்ட சிரேஷ்ட அதிகாரிகள் வடக்கில் இருக் கின்றபோதிலும் அவர்களிலும் பார்க்க கனிஷ்ட அதிகாரி ஒருவர் தற்போது நியமனம் செய்யப்பட்டுள்ளார். இதுகுறித்து நமது தலைவர்கள் பலரும் தத்தமது கண்டனங்களைத் தெரிவித்து வருகின்றனர். இன ரீதியாக இதனைப் பார்க்காவிட்டாலும் சிரேஷ்ட அதிகாரிகள் இருக்கும் போது இவரை நியமித்தது ஏற்றுக்கொள்ள முடியாததுதான். ஆனால், அதற்காக நமது தலைவர்கள் சொல்லும் காரணங்கள்தான் தலையை சுவருடன் மோத வைக்கின்றன.

வடக்கு மாகாணத்தின் முதல்வராக இருந்தவர். ஓர் உயர்நீதிமன்ற நீதிபதி சொல்கிறார்- 'வியத்மக' என்ற அமைப்பு நடத்திய பரீட்சையில் 95 புள்ளிகள் பெற்ற தெய்வேந்திரம் இருக்க, தமிழ் அதிகாரிகளின் நடவடிக் கையால், அதாவது 45 புள்ளிகள் பெற்ற அதிகாரிகள் தம்மை நியமிக்குமாறு அழுத்தம் கொடுத்ததால் சிங்களவர் நியமிக்கப்பட்டாராம்.

'வியத்தமக' 95 புள்ளிகள் கொடுத்த சங்கதியைப் பற்றி ஏற்கனவே இந்தப் பத்தியில் குறிப்பிட்டிருந்தேன்.

'வியத்மக' என்பது கோட்டபாயவை ஜனாதிபதி வேட்பாளராக ஆக்குவதற்காக அவருக்கு ஆதரவான சில புத்திஜீவிகள் ஆரம்பித்த அமைப்பு. இன்று சம்பிக ரண வக்கவை வேட்பாளராக்குவதை இலக்காக கொண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ள 43 இயக்கம் போன்று, அல்லது, கரு ஜெயசூரியாவை வேட்பாளராக்க அவர் நடத்தும் இயக்கம் போன்ற ஓர் அமைப்பு. அந்த அமைப்பில் இருந்தவர்கள் பலர் இன்று பல்வேறு பதவிகளில் அமர்த்தப்பட்டுள்ளனர். இப்போதும் ஜனாதிபதிக்கு அந்த அமைப்பு ஆலோசனைகளை வழங்கலாம். ஆனால், அதற்காக அதிகாரிகளை நியமிக்க பரீட்சை நடத்துகின்ற அளவிற்கு அவர்கள் தலையிட முடியாது.

அப்படித் தலையிட்டால் ஓர் அரசியல் தலைவர் என்ற வகையில் அதற்கு எதிராகக் குரல்கொடுக்கவேண்டியவர் இந்த விக்னேஸ்வரன். அதைவிடுத்து, வியத்மக 95 புள்ளி கள் போட்ட ஒருவரை நியமிக்கவில்லை என்று கண்டனம் தெரிவிக்கிறார்.

இதே விக்னேஸ்வரன் தான் முதல்வராக வந்ததும், அப்போது ஆளுநராக இருந்த பளிகக்காரவிடம் இதே தெய்வேந்திரத்திற்கு எதிராக முறையிட்டதை மறந்து விட்டிருக்கலாம். ஓர் ஊடகக்காரராக இந்த ஊர்க்குருவி அதனை மறக்கவில்லை. அப்போது பொதுச்சேவை ஆணைக்குழுவின் தலைவராக இருந்த தெய்வேந்திரம், பொதுச்சேவை ஆணைக்குழு நடத்தும் பரீட்சைகளில் முறைகேடு நடப்பதாக முறையிட்டிருந்தார்.

தெய்வேந்திரம் தலைமைச் செயலராக வருவதற்கு சகல தகுதிகளும் உடைய ஆள்தான், அதில் சந்தேகம் தேவையில்லை. ஆனால், அதற்காக வியத்மக அமைப்பை துணைக்கு அழைப்பது ஏற்றுக்கொள்ளக் கூடியதா என்பது தெரியவில்லை.

இதே 95 கதையையே ஈ. பி. ஆர். எல். எவ். தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரனும் கூறியிருக்கிறார்.

நமது தலைவர்களின் ஆளுமையை வெளிச்சம் போட்டுக்காட்ட இதைவிட வேறுஒன்றும் தேவை யில்லை. அவர்கள் தங்கள் கடமையைச் சரியாகத்தான் செய்துகொண்டிருக்கிறார்கள். கண்டிக்கவேண்டியதை உடனுக்குடன் கண்டிக்கிறார்கள்.

நாங்கள்தான் மேலே சென்ன பணக்காரர்போல முட்டாள்களாக இருந்து கொண்டிருக்கிறோமோ?

**- ஊர்க்குருவி**

# நாடு முழுக்க நடைபெறும் போராட்டத்துக்கு வடக்கு ஆசிரியர்களும் ஒத்துழைக்கவேண்டும்!

### இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் கோரிக்கை

கொழும்பு, ஜூலை 23

நாடு முழுவதும் அதிபர் ஆசிரி யர்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் போராட்டத்துக்கு தாம் ஆத ரவை வழங்குவதாகவும், அத்தோடு வடக்கு மாகாண அதிபர் ஆசிரியர் கள் இந்த போராட்டத்துக்கு பூரண ஒத்துழைப்பை வழங்கவேண்டும் எனவும் இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் செயலாளர் புயல்நேசன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே புயல்நேசன் இவ்வாறு தெரிவித் துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த அரசானது தனது ஆட்சிக் காலத்தில் சில கோட்பாடுகளை முன்வைத்து இருந்தது. அதிலும் 2023 ஆம் ஆண்டு கல்வி சீர்திருத் தத்தை கொண்டு வந்தது. அதே போல் மாணவர்களின் சீருடை மாற் றத்தைக் கொண்டு வந்தது. இவ்வாறு பல்வேறுபட்ட செயல்திட்டங்களை இந்த குறுகிய காலத் திலேயே இந்த அரசு முன்னெடுத் தது.

அரசின் சகல செயற்பாடுகளும் பல்வேறுபட்ட மாற்றங்களும் இந்த கொரோனா காலத்திலே முன்னெ டுக்கப்பட்டன.

அதேபோல ஆசிரியர்கள், அதி பர்கள் இந்த காலத்தில் போராட் டத்தில் ஈடுபடுவதை தவறு என கூறு வதை ஏற்றுக்கொள்ள முடியாது.

கொரோனா காலத்தில் ஆசிரி யர்கள் அதிபர்கள் போராட்டத்தில் ஈடுபடுவது என்பது மாணவர்களின் கல்வியில் பெரிய பாதிப்பை ஏற்படுத்தும்.

வட மாகாணத்தில் 13 வலயங் கள் செயல் நிலையில் உள்ளன. சம் பள முரண்பாடு அதாவது 30 வரு டங்களாக காணப்படுகின்ற சம்பள முரண்பாட்டுக்கு தீர்வு காண வேண்டுமாயின் அனைத்து ஆசிரி யர்களும் இந்த போராட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். எமது உரிமைகளை வென்றெடுப்ப தற்கு சகலரும் இந்த போராட்டத் திற்கு ஒத்துழைக்க வேண்டும். நமக்கு வெற்றி கிடைக்கும் வரை போராட்டத்தை நாங்க முன்னெ டுப்பதன் மூலம் தமக்கு உரிய உரிமை களை மீட்டெடுக்க முடியும்.

நாடு தழுவிய ரீதியாக முன்னெ டுக்கப்படும் போராட்டத்திற்கு சகல ஆசிரியர்கள், அதிபர்கள் பூரண ஒத்துழைப்பினை வழங்க வேண்டும். வடக்கு மாகாணத் திற்குட்பட்ட சகல வலயத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள்,அதிபர்கள் இந்த போராட்டத்திற்கு ஆதரவு வழங்கவேண்டும். -என்றார்.

## மொடர்னா குறித்து தவறான பிரசாரங்கள் விசாரணைகள் ஆரம்பம்

கொழும்பு, ஜூலை 23

மொடர்னா தடுப்பூசி தொடர் பில் சமூக ஊடகங்களில் தவறான பிரசாரங்கள் பரப்பும் நபர்களைக் கண்டறிவதற்காக குற்றப் புல னாய்வு திணைக்கள அதிகாரிகளின் உதவியுடன் சிறப்பு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கண்டி வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி ஒருவர் செய்த முறைப்பாட்டுக்கு அமைவாக இவ் வாறு விசாரணைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதி பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

மொடர்னா தடுப்பூசி உடலுக்கு தீங்கு விளைவிக்கும் எனவும் மற்றும் நனோ தொழில்நுட்பத் தைக் கொண்டுள்ளது எனவும் சமூக ஊடகங்களில் சில தவறான செய்தி கள் பரப்பப்படுவதாக குறித்த மருத் துவர் முறைப்பாடு செய்துள்ளார்.

### கல்வி TV CHANNEL-1 — 23.07.2021 வெள்ளிக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | தமிழ் |
| 08.15 | தரம்-10 | வரலாறு |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | வர்த்தகம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | சித்திரம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறுஒளிபரப்பு அனைத்துப் பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | வர்த்தகம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | வரலாறு |

### கல்வி TV CHANNEL - 2 — 23.07.2021 வெள்ளிக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | English |
| 09.45 | தரம்-03 | அழகியல் |
| 10.30 | தரம்-03 | கணிதம் |
| 11.15 | தரம்-04 | English |
| 12.30 | தரம்-04 | கணிதம் |
| 01.15 | தரம்-05 | Singalam |
| 02.00 | தரம்-05 | கணிதம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | English |
| 06.00 | தரம்-03 | அழகியல் |
| 06.45 | தரம்-03 | கணிதம் |
| 07.30 | தரம்-04 | English |
| 08.15 | தரம்-04 | கணிதம் |
| 09.00 | தரம்-05 | சிங்களம் |
| 09.45 | தரம்-05 | கணிதம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | அழகியல் |
| 12.30 | தரம்-03 | கணிதம் |
| 01.15 | தரம்-04 | English |
| 02.00 | தரம்-04 | கணிதம் |
| 02.45 | தரம்-05 | Singalam |
| 03.30 | தரம்-05 | கணிதம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu
23.07.2021 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம், ஆடி 07

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

# விக்னேஸ்வரன் விரைந்து செயல்பட வேண்டும்!

முன்னாள் வடக்கு மாகாண முதலமைச்சரும் தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவருமான சி. வி. விக்னேஸ்வரன், மாகாண சபை அதிகாரத்திற்குட்பட்ட பாடசாலைகள் மற்றும் வைத்தியசாலைகளை, மத்திய அரசின் கீழ் கொண்டு செல்வதற்கு எதிராக நீதிமன்றத்தை நாடப் போவதாக அறிவித்திருக்கின்றார். மாகாண சபை அதிகாரம் தொடர்பில் ஒரு தமிழ் அரசியல்வாதி நீதிமன்றம் செல்லப் போவதாகத் தெரிவித்திருப்பது இதுவே முதல் தடவை. உண்மையில் இந்த விடயத்தை கூட்டமைப்பு எப்போதோ செய்திருக்க வேண்டும்.

இந்தியாவில் மாநிலங்களின் அதிகாரம் தொடர்பில் சிக்கல்கள் ஏற்படும் போது, மாநில அரசாங்கம் உச்சநீதிமன்றத்தையே நாடும். இன்று இந்தியாவில் மாநிலங்களின் ஆட்சி சிக்கல்கள் இன்றி தொடர்வதற்கு உச்சநீதிமன்றத்தின் தீர்ப்புக்களே முக்கிய காரணம். ஆனால், இலங்கையை பொறுத்தவரையில் மாகாண சபையின் அதிகாரங்கள் தொடர்பான பிரச்னைகள் ஏற்படும்போது, அதனை சட்டரீதியில் சவாலுக்கு உள்ளாக்கும் அரசியல் அணுகுமுறையை தமிழ் கட்சிகள் இதுவரையில் பிரயோகித்ததில்லை. இத்தனைக்கும் தமிழ் தேசிய அரசியல் கட்சிகளின் தலைவர்கள் பலர் பிரபலமான சட்டத்தரணிகளாவர். கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், பிரபலமான சட்டத்தரணி.

1987 இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் கிடைக்கப்பெற்ற மாகாண சபை முறைமையானது, இன்று வரையில் தமிழ் மக்களுக்கு முழுமையாக பயன்படவில்லை. இத்தனைக்கும் தமிழ் மக்களின் தேசிய பிரச்னைக்கான தீர்வாகவே மாகாண சபை முறைமை இலங்கைக்கு அறிமுகமானது. இலங்கையை மாறி, மாறி ஆட்சிசெய்த அரசாங்கங்கள் 13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவதில் நாட்டம் காண்பிக்கவில்லை. அத்துடன், அதனை பலவீனப்படுத்தவே முயற்சித்தனர் என்பது உண்மை. ஆனால், 13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்த வைப்பதற்காக தமிழ் தேசிய கட்சிகள் இதுவரையில் என்ன முயற்சிகளை மேற்கொண்டிருக்கின்றன? மாகாண அதிகாரம் தொடர்பான சிக்கல்கள் எழுகின்ற சந்தர்ப்பங்களில் அதனை இலங்கையின் உச்ச நீதிமன்றத்தில் சவாலுக்குள்ளாக்க முயற்சித்திருக்கின்றனவா?

இந்திய – இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் தற்காலிகமாக இணைக்கப்பட்ட, வடக்கு – கிழக்கு மாகாணங்கள், 18 வருடங்கள் நிர்வாகரீதியாக நடைமுறையில் இருந்தது. 2006இல், இரு மாகாணங்களும் இணைக்கப்பட்ட முறைமை பிழை என்று கூறி, ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி) உச்சநீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தது. அதனை விசாரித்த அப்போதையே உச்சநீதிமன்ற நீதிபதி, சரத் என்.சில்வா, இணைக்கப்பட்ட முறைமை தவறு என்று தீர்ப்பு வழங்கினார். மாகாணங்கள் சட்டரீதியாக பிரிக்கப்பட்டது. இதனை சட்டரீதியில் சவாலுக்குள்ளாக்கியிருக்க முடியும். ஆனால், சட்டத்தரணி சம்பந்தன் அமைதியாக இருந்தார்.

13ஆவது திருத்தச்சட்டம் இந்த நாட்டின் அரசியல் யாப்பு. ஓர் அரசியல் யாப்பில் குறிப்பிடப்பட்டிருக்கும் விடயங்களை அமுல்படுத்த முடியாது என்று கூற முடியுமா? சட்டரீதியில் இதன் பெறுமதி என்ன? இதனை உச்சநீதிமன்றத்தில் கேள்விக்குள்ளாக்க முடியாதா? இது தொடர்பில் ஏன் கூட்டமைப்பினர் சிந்திக்கவில்லை? தமிழில் ஒரு கூற்றுண்டு. அதாவது, அழுகிற பிள்ளைதான் பால் குடிக்கும்.

அதே போன்று தேவையுள்ள தமிழர் தரப்பு 13ஐ அமுல்படுத்துவதற்காக பாடுபடாதபோது, அதன் மீது மற்றவர்கள் எவ்வாறு அக்கறை காட்டுவார்கள்? இந்த அடிப்படையில் விக்னேஸ்வரன் தெரிவித்திருக்கும் கருத்து பாராட்டத்தக்கது. வெறும் பேச்சளவில் நிற்காது, விக்னேஸ்வரன் இந்த விடயத்தை விரைந்து முன்னெடுக்க வேண்டும். விக்னேஸ்வரன் முன்னாள் உச்சநீதிமன்ற நீதியரசர், அவர் தலைமையில் இந்த விடயத்தை முன்னெடுப்பது மிகவும் பொருத்தமானது. இந்த விடயத்தில் அவருக்கு கைகொடுக்க வேண்டியது தமிழ்த் தேசியர்களின் கடமை.

# அரசியலில் ஜனாதிபதியின் முதிர்ச்சி நிலை?

- அலசுவது இராஜதந்திரி -



ஒரு சில தினங்களுக்கு முன்னரே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அடுத்து வரும் ஜனாதிபதி தேர்தலிலும் போட்டியிடப் போவதாக அறிவித்திருந்தார். இதனையடுத்து தற்போது பொறுப்புக்கூறல், நல்லிணத்துக்கு ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்துடன் இணைந்து செயல்பட தயாராக இருப்பதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் இந்த அறிவிப்பு அரசியலில் தற்போது ஒரு முதிர்ச்சி நிலையை அவர் எட்டியுள்ளாரோ என்று எண்ணத்தோன்றுகின்றது.

ஜனாதிபதியின் இப்புதிய அறிவிப்பை நோக்குமிடத்து இரண்டாவது தடவையாகவும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தமது எண்ணத்துக்கு வலுவூட்டும் விதத்தில் வடக்கு - கிழக்கு மக்களின் ஆதரவை பெறுவதோடு சர்வதேச சமூகத்தின் நல்லபிமானத்தையும் பெறும் விதத்தில் பொறுப்புக்கூறலுக்கும், நல்லிணக்கத்துக்கும் தாம் தயாராக இருக்கிறார் கூறியுள்ளாரோ எனவும் எண்ணத் தோன்றுகின்றது.

**உள்ளக நியாயாதிக்கம்**

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பொறுப்புக்கூறலுக்கு தாம் தயாராக இருக்கிறார் எனக் கூறியுள்ள போதிலும் நாட்டின் உள்ளக நியாயாதிக்கத்துக்கு உட்பட்ட விதத்திலேயே பொறுப்புக்கூறலை முன்னெடுக்கவுள்ளாரெனத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைப் பொறுத்தவரை உள்நாட்டில் மட்டுமல்ல. சர்வதேச ரீதியாகவும் தமது அரசியல் நடவடிக்கையில் கவனஞ்செலுத்த வேண்டியவராகின்றார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைமீது கொண்டு வரப்பட்டுள்ள பிரேரணைகளில் பொறுப்புக் கூறலும், நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டியதுமே பிராதானமானவையாக இருக்கின்றன.

இலங்கையின் பொறுப்புக்கூறலைப் பொறுத்தவரை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பங்களிப்பு தவிர்க்க முடியாத தொன்றாகவே இருக்கின்றது. ஏனெனில், வடக்கு - கிழக்கு யுத்தம் மும்முரமடைந்திருந்த இறுதித்தருணங்களில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவே பாதுகாப்புச் செயலாளராக பணியாற்றியிருந்தார். எனவே, யுத்தக்குற்றங்கள் எனக்கண்டறியப்பட்டவை தொடர்பாக பொறுப்புக்கூறலை உள்ளக சட்ட நடவடிக்கைகள் மூலமாகவோ அல்லது சர்வதேச அனுசரணையுடனோ முன்னெடுக்க வேண்டியவராக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ காணப்படுகின்றார்.

யுத்தக்குற்றங்கள் என்ற வகையில் இறுதிக் கட்ட யுத்தத்தின்போது வெள்ளைக்கொடியுடன் வந்து சரணடைந்தவர்களுக்கு நேர்ந்த கதி உட்பட இராணுவத்தினர் கேட்டுக் கொண்டதன் பேரில் சரணடைந்து இதுவரை காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாகவும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பொறுப்புக்கூற வேண்டியவராகின்றார்.

**வரவேற்கப்பட வேண்டியது**

எது எப்படியிருந்தபோதிலும் பொறுப்புக் கூறலை நிராகரிக்காது அதனை முன்னெடுக்க சம்மதித்திருப்பது வரவேற்கப்பட வேண்டியதாகவே இருக்கின்றது.

அதேசமயம் நல்லிணக்கத்தை ஏற்படுத்த ஜனாதிபதி இணங்கியிருப்பதுகூட வரவேற்புக்குரியதே. இருந்தபோதிலும் எவ்வளவு தூரம் ஜனாதிபதி கூறியவை சாத்தியமாகும் என்பதே முக்கிய கேள்வியாக இருக்கின்றது.

நாட்டில் அரசியல் பிரச்னைகள் ஒருபுறமிருக்க, பொருளாதார ரீதியான பிரச்னைகளும் வலுவடைந்திருக்கின்றன.

பிராந்திய ரீதியான அரசியலைப்பொறுத்தவரை சீனா, இலங்கையை தென்னாசிய பிராந்தியத்தில் தனது வல்லாதிக்க விஸ்தரிப்புக்கு பகடைக்காயாக வைத்திருப்பதை இந்தியாவோ அல்லது மேற்கத்தேய நாடுகளோ விரும்புவதாக காணப்படவில்லை.

இந்நிலையில் இலங்கையில் சர்வதேச சமூகமோ அல்லது இந்தியாவோ தலையீட்டை மேற்கொள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை பிரேரணைகள் ஏதுவாக இருக்கின்றன.

இதன்காரணமாகவே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தமது ஆளுமையை வெளி உலக சவால்களிலிருந்து காப்பாற்றிக் கொள்வதற்காக பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கம் தொடர்பாக தமது கரிசனையை வெளியிட்டிருக்க முடியுமெனவும் கருத முடிகின்றது.

**பொறுப்புக்கூறல்**

இலங்கையைப் பொறுத்தவரை இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தை பேணுவதற்கு, குறிப்பாக யுத்தத்தினால் பாதிப்புற்ற வடக்கு - கிழக்கு மக்களை பரந்துபட்ட தேசிய அரசியல் நீரோட்டத்தில் இணைப்பதற்கும் பொறுப்புக்கூறல் இன்றியமையாததாகின்றது.

ஆனால், பேச்சளவில் மட்டும் பொறுப்புக் கூறல் மற்றும் நல்லிணக்கம் தொடர்பாக தனது கரிசனையை வெளியிடுவதன் மூலம் வடக்கு - கிழக்கு மக்களின் நல்லபிமானத்தையும் சர்வதேச சமூகத்தின் வரவேற்பையும் பெற முடியுமென ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கருதுவாரேயானால் அவர் ஏமாற்றத்தையே தழுவ நேரிடும்.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் ஜெனிவாவில் மனித உரிமைகள் பேரவையின் 48ஆவது கூட்டத்தொடர் இடம்பெறவுள்ளது. அச்சமயம் ஜெனிவாவில் இலங்கை தொடர்பாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் கொண்டுவரப்பட்ட பிரேரணைகள் எவ்வளவு தூரம் முன்னெற்றகரமாக முன்னெடுக்கப்படுகின்றன என்பது பற்றி ஆராயப்படவிருக்கின்றது.

எனவே, இதுவிடயத்தில் தாம் முந்திவிட வேண்டமென்ற நோக்கில் ஜனாதிபதி பொறுப்புக்கூறல், நல்லிணக்கம் தொடர்பாக தமது அபிப்பிராயத்தை வெளியிட்டாரோ எனவும் எண்ணத்தோன்றுகின்றது.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஜூலை - 23 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம் - ஆடி 07
நல்ல நேரம் : 9.00 - 10.30
ராகு காலம் : 10.30 - 12.00
திதி : பௌர்ணமி




23.07.2021

**மேடம்**
எதிர்பார்த்த விஷயத்தில் தாமதம் ஏற்படலாம். உடல்நிலை சீர்படும். பணிகளில் உற்சாமுடன் ஈடுபடுவீர்கள். புத்தி சாதுர்யம் அதிகரிக்கும். பணவிஷயத்தில் கவனம். பொறுமை காப்பது நல்லது.

**இடபம்**
வெளியாட்களை நம்பாதீர்கள். உணவு விஷயத்தில் கவனம். திருமணம் பற்றிய பயம் வேண்டாம். வயிறு சம்பந்தப்பட்ட பிரச்னை தீரும். பொது சேவைகளில் ஈடுபாடு கொள்வீர்கள். புகழ் மேலோங்கும்.

**மிதுனம்**
பொழுது போக்குகளில் ஈடுபட்டு மகிழ்வீர்கள். சுகமான நாள்.எதிர்பார்ப்புகள் நிறைவேறும். குடும்பத்தில் அமைதி நிலவும். உழைப்புக்கேற்ற நற்பலன் கிடைக்கும். நண்பரால் உதவியுண்டு.

**கடகம்**
குடும்பத்தினரின் ஆதரவு கிடைக்கும். வருமானம் சீராக இருக்கும். எதிர்பார்த்த ஒரு விஷயத்தில் நினைத்ததை விடச் செலவு குறையும். புத்திசாலித்தனத்தால் மற்றவர்களைக் கவர்வீர்கள்.

**சிம்மம்**
அழகுணர்ச்சி அதிகரிக்கும். பேச்சில் புத்திசாலித்தனம் வெளிப்படும். விறுவிறுப்பான நாள். ஆதாயம் கிடைக்கும். வீண்பயம் அகலும். நண்பர்கள் மூலம் சந்தோஷ செய்தி வரும். உதவி கிடைக்கும்.

**கன்னி**
மற்றவர்களால் முடியாத விஷயத்தையும் செய்து முடிப்பீர்கள்.அரசாங்கம் மூலம் எதிர்பார்த்த நன்மை தாமதமாக நடக்கும்.வீடு கட்டுவதில் வாங்குவதில் இருந்த தடங்கல் மறையும்.

**துலாம்**
சொத்து சேர வாய்ப்புண்டு. நண்பர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள்.அடுத்தவரின் மனநிலையை புரிந்து கொண்டு அதற்கேற்ப செயல்படுவீர்கள். சகோதரர்களால் நன்மை காண்பீர்கள். சுபப் பேச்சு நடக்கும்.

**விருட்சிகம்**
கற்பனை பயத்தைக் கைவிட்டு முக்கிய முடிவெடுக்கும் நாள். முன்யோசனையுடன் நடந்துகொள்வது நல்லது. ஆரோக்கியம் மேம்படும். எதிரியாக நினைத்தவர்களை முறியடித்து முன்னேறுவீர்கள்.

**தனுசு**
பிள்ளைகளால் பெருமை சேரும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.விருப்பம் ஒன்று நிறைவேறும். மனதில் நிம்மதி நிலவும். பொருளாதார நெருக்கடி குறையும். மன நிறைவான நாள்.

**மகரம்**
குடும்பத்தில் கலகலப்பு உருவாகும். நிம்மதி நீடிக்கும். சங்கடம் தீர்ந்து நிம்மதி காண்பீர்கள். கடன் தொல்லை அகலும். தடைகள் குறுக்கிட்டாலும் முயற்சிக்கான பலன் கிடைக்கும்.

**கும்பம்**
எதிர்பார்த்த உதவி கிடைக்காமல் போகலாம். பணியில் அலட்சியம் வேண்டாம். தேவையான பொருட்களை வாங்குவீர்கள். மனக்கவலை தீரும். குடும்பத்தில் திருமணப் பேச்சு முடிவுக்கு வரும்.

**மீனம்**
மற்றவர் குற்றத்தை மன்னித்துப் பெருந்தன்மையுடன் நடப்பீர்கள். தடைப்பட்ட நல்ல விஷயம் மீண்டும் தொடரும் அமைதியான நாள். கவலை வந்து போகும். கடின உழைப்பால் நன்மை அடைவீர்கள்.

# சட்டத்துறை அமைச்சர் ரகுபதியிடம் நளினி முன்வைத்த கோரிக்கை



வேலூர், ஜூலை 23

“ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்று வரும் நளினியும் முருகனும் நீண்ட நாள் விடுப்பு வேண்டும்எனக்கோரிக்கை விடுத்தனர். இதுகுறித்து நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து அனுமதி பெற்றால், அதைச்செயல்படுத்த அரசு தயாராக உள்ளது” என தமிழக சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்துள்ளார்.

வேலூர் தொரப்பாடியில் உள்ள ஆண்கள் மத்திய சிறை, பெண்கள் தனிச்சிறை ஆகியவற்றை சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி நேற்று முன்தினம் ஆய்வு மேற்கொண்டார்.

அங்குள்ள கைதிகளிடம் குறைகளைக் கேட்டறிந்த அமைச்சர், ஆண்கள் சிறையில் உள்ள சமையல் கூடம், கைதிகள் அறைகள், கைதிகளுக்கான தொழில்வாய்ப்பு, சிறை நடைமுறைகள் ஆகியவற்றை ஆய்வு செய்தார். பின்னர் பெண்கள் தனிச்சிறையில் ஆய்வுக்குச் சென்ற அமைச்சர் ரகுபதி, ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைதாகி 30 ஆண்டுகளுக்கு மேலாக சிறையில் இருக்கும் நளினியைச் சந்தித்து பேசி, அவரின் கோரிக்கைகளைக் கேட்டறிந்தார்.

“இதையடுத்து செய்தியாளர்களைச் சந்தித்த அமைச்சர் ரகுபதி, “ஆண்கள் மத்திய சிறையில் 742 பேரும், பெண்கள் சிறையில் 97 பேரும் உள்ளனர். சிறையில் உள்ள அனைத்து பகுதிகளையும் ஆய்வு செய்தேன்.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்றுள்ள முருகன், நளினி, சாந்தன் உள்பட அனைத்துக் கைதிகளையும் சந்தித்து குறைகளை கேட்டறிந்தேன். முருகன், நளினி இருவரும் தங்களுக்கு நீண்ட நாள் விடுப்பு வழங்க வேண்டும்என்று கோரிக்கை வைத்தனர். எங்களால் 30 நாள்களுக்கு மட்டும்தான் விடுப்பு வழங்க முடியும். அதைத் தாண்டி கூடுதலாக மேலும் 30 நாள்கள் வழங்க முடியும். ஆனால், நீண்ட விடுப்புக்கு அவர்கள் நீதிமன்றத்தை அணுகி அனுமதி பெற்றால், தளபதி மு.க.ஸ்டாலின் தலைமையிலான அரசு, அதை நடைமுறைப்படுத்த தயாராக உள்ளது.” என்று கூறினார்.

# முன்னாள் போக்குவரத்துத்துறை அமைச்சர் விஜயபாஸ்கர் மீது சொத்துக்குவிப்பு வழக்கு



சென்னை, ஜூலை 23

அ.தி.மு.க. முன்னாள் போக்குவரத்துத்துறை அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கர் மீது சொத்துக்குவிப்பு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. அவரது வீடுகள் நேற்று அதிரடியாக சோதனைக்குள்ளாக்கப்பட்டன.

கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்தவர் எம்.ஆர்.விஜயபாஸ்கர். அப்போது, போக்குவரத்துத் துறையில் பல்வேறு முறைகேடுகள் மற்றும் ஊழல்கள் நடைபெற்றதாக, சென்னை வழக்கு உள்ளது.

கடந்த ஆட்சியில் வாகனங்களுக்கான ஜிபிஎஸ் கருவிகள் விற்க 118 நிறுவனங்கள் இருக்கும்போது, 8 நிறுவனங்களிடம் மட்டும் அவற்றை வாங்குமாறு போக்குவரத்துத் துறை பிறப்பித்த உத்தரவுக்கு சென்னை உயர் நீதிமன்றம் தடை விதித்தது. மேலும், ஜி.பி.எஸ். கருவிகள் வாங்க போடப்பட்ட உத்தரவுக்கும் உயர் நீதிமன்றம் தடை விதித்தது. இது தொடர்பாக, அப்போது எதிர்க்கட்சியாக இருந்த தி.மு.க, கடும் குற்றச்சாட்டு களை எழுப்பி வந்தது.

எனினும், இந்தக் குற்றச்சாட்டுகளை எம்.ஆர்.விஜயபாஸ்கர் மறுத்துவந்தார். இதனிடையே தி.மு.க. ஆட்சிக்கு வந்தால் அதிமுக அமைச்சர்கள் மீதான ஊழல் புகார்கள் குறித்து விசாரித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கருக்குச் சொந்தமாக கரூரில் உள்ள வீடு, நிறுவனங்கள், உறவினருக்குச் சொந்தமான வீடுகள் உள்ளிட்ட 21 இடங்களில் லஞ்ச ஒழிப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு பொலிஸார் சோதனை நடத்தியுள்ளனர்.

# முதலமைச்சரின் அழைப்பினை ஏற்று ஜனாதிபதி ராம்நாத் தமிழகம் வருகை



சென்னை, ஜூலை 23

முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் அழைப்பை ஏற்று இந்திய ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் தமிழ்நாட்டிற்கு ஆகஸ்ட் முதல் வாரத்தில் வருகை தருகிறார் என நேற்று அறிவிக்கப்பட்டது.

மறைந்த முன்னாள் முதலமைச்சரின் கருணாநிதியின் நினைவு தினமான ஆகஸ்ட் 7 ஆம் தேதி வருகிறது. அப்போது சட்டசபையில்கருணாநிதியின்உருவ படத்தை திறக்க முடிவு செய்யப்பட்டு உள்ளது. கருணாநிதியின் படத்திறப்பு விழாவுக்கு சோனியா காந்தி உள்ளிட்ட அனைத்துக் கட்சி தலைவர்களை அழைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஜனாதிபதி ராம்நாத் கோவிந்தை சந்திக்க கடந்த வாரம் 19ஆம் திகதி டில்லி சென்றார். அப்போது முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியின் நினைவு நாளின்போது அவரது படத்திறப்பு விழாவில் பங்கேற்க வருமாறு ஜனாதிபதி ராம்நாத் கோவிந்துக்கு அழைப்பு விடுத்திருந்தார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் அழைப்பை ஏற்று ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் தமிழ்நாட்டிற்கு ஒகஸ்ட் முதல் வாரத்தில் வருகை தர உள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளது.

# நம்பிக்கையில்லா பிரேரணை தவறான ஒரு செயற்பாடாகும்!

## குமார வெல்கம சீற்றம்

கொழும்பு, ஜூலை 23

**நிதி அமைச்சர் அல்லது ஒட்டுமொத்த அரசுக்கு எதிராக அல்லாமல் வலுசக்தி அமைச்சருக்கு எதிராக மட்டும் எதிர்க்கட்சி நம்பிக்கையில்லாப் பிரேரணை முன்வைத்தமை தவறான செயற்பாடாகும். இதனால்தான் அதற்கு ஆதரவு வழங்கவில்லை.**

வாக்கெடுப்பிலும் பங்கேற்கவில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியின் களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்தார்.

நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான வாக்கெடுப்பில் பங்கேற்காமை தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

நான்சிரேஷ்ட அரசியல்வாதி. 24 வருடங்களுக்கு மேலாக பாராளுமன்ற அரசியலில் ஈடுபட்டு வருகின்றேன். சந்திரிகா அம்மையாரின் காலப்பகுதியில் பெற்றோலியவளத்துறை பிரதி அமைச்சராக செயற்பட்டுள்ளேன். எனவே, துறைசார் அமைச்சரால் விலை அதிகரிப்பை மேற்கொள்ள முடியாது என்பது எனக்கு தெரியும். நிதி அமைச்சரே அது தொடர்பில் முடிவெடுப்பார். அறிவிப்பை மட்டுமே துறைசார் அமைச்சர் விடுப்பார்.

எனவே, நிதி அமைச்சருக்கு எதிராகவே குறித்த நம்பிக்கையில்லாப் பிரேரணை முன்வைக்கப்பட்டிருக்கவேண்டும். அதனை எதிரணி செய்யவில்லை. இதனால்தான் நம்பிக்கையில்லாப் பிரேரணையில் நான் கையொப்பமிட வில்லை. இது தொடர்பில் என்னிடம் எவரும் கேள்வி எழுப்பவும் இல்லை.



நான் எந்த பக்கத்தில் இருந்தாலும் பிழைய நேரில் சுட்டிக்காட்டுபவன். இப்பிரேர ணையால் பிளவுபட்டிருந்த அரச கூட்டணி ஒன்று சேர்ந்துள்ளது. -என்றார்.

# டயகம சிறுமி மரணம் தீவிர விசாரணை துரிதம்

கொழும்பு, ஜூலை 23

பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான ரிஷாத் பதியுதீனின் வீட்டில் பணிபுரிந்து மர்மமான முறையில் தீப்பிடித்து உயிரிழந்த சிறுமி ஹிஷாலினியின் மரணம் தொடர்பில் தொடர் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இரண்டு விசேட குழுக்கள் அந்த விசாரணைகளில் ஈடுபட்டு வருவதாகவும் அதற்கிணங்க சிறுமியின் தாயாரிடம் மீண்டும் நேற்று முன் தினம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் அவர் முன்னர் கல்விகற்ற பாடசாலை அதிபர் மற்றும் உப அதிபர் உள்ளிட்ட மேலும் பலரிடம் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

விசாரணைகளில் எவரதும் அழுத்தங்கள் பிரயோகிக்கப்படவில்லை என தெரிவித்துள்ள அவர், அவ்வாறு அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டாலும் அதனைக் கவனத்திற் கொள்ளாது பொலிஸார் தன் கடமைகளை முறையாக மேற்கொள்வர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பொரளை பொலிஸ் நிலையத்துக்கு மேலதிகமாக மேலும் இரண்டு விசேட பொலிஸ் குழுக்களான கொழும்பு தெற்கு பிரிவு சிறுவர் மற்றும் மகளிர்



பிரிவினரும் கொழும்பு தெற்கு குற்ற வியல் விசாரணைப் பிரிவும் இந்த விசாரணைகளை மேற்கொள்கின்றன.

அதேவேளை முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் வீட்டில் பணிபுரிந்த ஒருவரது கையடக்க தொலைபேசியை பொலிஸார் கைப்பற்றியுள்ளதுடன் அவரிடம் வாக்குமூலமும் பதிவு செய்யப்பட்டுள்ளது. கையடக்கத் தொலைபேசியில் தகவல்கள் அழிக்கப்பட்டுள்ளனவா என்பது தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ள கையடக்கத்தொலைபேசி புலனாய்வு திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கையடக்க தொலைபேசி மூலம் பெறப்படும் தரவுகளை பகுப்பாய்வுக்கு உட்படுத்துவதற்கும் வங்கிக் கணக்கை ஆராய்வதற்கும் நீதிமன்றத்தினால் அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

அத்துடன் மருத்துவ அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பிலும் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

# யாழ்.கல்வி வலய அதிபர் ஒருவருக்கு கொரோனா!

யாழ்ப்பாணம், ஜூலை 23

யாழ்.வலயத்தைச் சேர்ந்த அதிபர் ஒருவருக்கு கோரோனா தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டு நேற்று அவர் தனிமைப் படுத்தல் மையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

இவர் கடந்த புதன்கிழமை கல்வித்திணைக்களத்தில் நடைபெற்ற அதிபர்களுக்கான கூட்டத்தில் கலந்துகொண்டதாகவும் அதில் 50பேர் பங்குபற்றியதாகவும் கூறப்படுகின்றது.

இதைவிட குறித்த அதிபர் தான் கடமையாற்றும் பாடசாலையில் வகுப்புகளை நடத்தியுள்ளதோடு பெற்றோர் கலந்துரையாடலையும் நடத்தியுள்ளார்.

அது மட்டுமன்றி உரும்பிராயில் நடைபெற்ற பூப்புனித நீராட்டுவிழா ஒன்றிலும் கலந்து கொண்டுள்ளார்.

இவருடன்தொடர்பில்இருந்த அல்லது இவரோடு நிகழ்வுகளில் பங்கேற்ற பலர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதோடு இவரது வீட்டாரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இம்மாதம் 9ஆம் திகதி குறித்த பாடசாலை அதிபர் முதலாவது கொரோனா தடுப்பூசி பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# தனிமைப்படுத்தலில் இருந்து மேலும் ஒரு பகுதி விடுவிப்பு

கொழும்பு, ஜூலை 23

நாட்டில் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டு இருந்த மேலும் ஒரு பகுதி தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டு உள்ளதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

நுவரேலியா மாவட்டத்தின் பொகவந்தலாவ பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கொட்டியாகல தோட்டத்தின் கீழ்ப் பிரிவு இவ்வாறு தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

# பளை இலங்கை வங்கி கிளையில் ஆறு பேருக்கு கொரோனா உறுதி

கிளிநொச்சி, ஜூலை 23

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பளை இலங்கை வங்கிக் கிளையில் பணியாற்றும் ஆறுபேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

பளை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினைச் சேர்ந்த 16 பேருக்கு நேற்று முன் தினம் யாழ்.போதனா வைத்தியசாலையில் பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

அவர்களில் ஆறு பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்ட அதேவேளை ஒருவருக்கு மீள் பரிசோதனை செய்யப்படவேண்டியுள்ளதாக மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டவர்கள் குறித்த தகவல்களின் அடிப்படையில், இலங்கை வங்கியின் பளைக் கிளையில் பணியாற்றும் ஊழியர்கள் நால்வரும் அங்கு பயிற்சியாளர்களாக பணியாற்றும் இருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக பகுதிக்குப் பொறுப்பான சுகாதாரத் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

# மட்டக்களப்பு இரண்டு தினங்களில் 2 இலட்சம் சினோபார்ம் தடுப்பூசிகள்!

மட்டக்களப்பு, ஜூலை 23

மட்டக்களப்பு மாவட்டத்துக்கு இரண்டு தினங்களில் இரண்டு இலட்சம் சினோபார்ம் தடுப்பூசிகள் கிடைக்கப்பெறவுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் நாகலிங்கம் மயூரன் தெரிவித்தார்.

இன்று முதல் மட்டக்களப்பு மாவட்டத்தின் 14 சுகாதார வைத்திய அதிகாரி அலுலகம் ஊடாக 30வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசிகள் ஏற்றப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் நேற்று காலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனை தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 24மணி நேரத்தில் 28 கொரோனா தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதுடன் இருவர் மரணமடைந்துள்ளனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் இதுவரையில் 7863 கொரனா தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதுடன் 112பேர் மரணமடைந்துள்ளதுடன் 6100 பேர் குணமடைந்து வீடு சென்றுள்ளனர்.

கடந்த வாரம் 471 கொரனா தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதுடன் மட்டக்களப்பு மாவட்டத்தில் இதுவரை 78000 தடுப்பூசிகள் ஏற்றப்பட்டுள்ளதுடன் 60வயதுக்கு மேற்பட்ட 90வீத மானவர்களுக்கு தடுப்பூசிகள் ஏற்றப்பட்டுள்ளதாகவும் மருத்துவர் மயூரன் தெரிவித்தார்.

# கிழக்கில் இந்திய முதலீட்டு வாய்ப்புகள் தொடர்பில் உயர்மட்ட கலந்துரையாடல்

மட்டக்களப்பு, ஜூலை 23

கிழக்கு மாகாணத்தில் இந்திய முதலீடுகளுக்கான வாய்ப்புகள் மற்றும் பிராந்தியத்தின் பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்துவதற்காக முன்னெடுக்கப்படக்கூடிய கூட்டு முயற்சிகள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பான கலந்துரையாடலொன்று நேற்று முன் தினம் கொழும்பில் இடம்பெற்றுள்ளது.

பின்தங்கிய கிராமிய அபிவிருத்தி, வீட்டு விலங்கின வளர்ப்பு மற்றும் சிறுபொருளாதார பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சரும் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான எஸ். வியாழேந்திரன் மற்றும் இலங்கைக்கான இந்திய பதில் தூதுவர் வினோத் ஜேக்கப் ஆகியோரிடையே இந்த கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது. குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் இந்திய இலங்கை அபிவிருத்தி ஒத்துழைப்பு பங்குடமை குறித்த நோக்குகள் தொடர்பாகவும் இரு தரப்பினரும் தமது கருத்துக்களை பரிமாறியுள்ளனர்.

சுமார் ஒரு மணித்தியாலம் நடைபெற்ற இந்த சந்திப்பில் இராஜாங்க அமைச்சின் செயலாளர் மருத்துவர் அமல் ஹர்ஷ டி சில்வா, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் இணைப்புச் செயலாளர் செந்தில் தொண்டமான் மற்றும் இந்திய தூதரகத்தின் அபிவிருத்தி ஒத்துழைப்பு பிரிவின் தலைமை அதிகாரி எல்டோஸ் மத்தியூ புண்ணூஸ் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

கடந்த ஜனவரியில் கொழும்புக்கு வருகை தந்திருந்த இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரனுடன் சந்திப்பு ஒன்றினை மேற் கொண்டிருந்தார். கிழக்கு மாகாணத்தின் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத் தியில் இந்திய அரசாங்கம் எப் பொழுதும் உறுதியான ஈடுபாட்டை கொண்டிருக்கின்றமையுடன், இந்திய முதலீட்டாளர்களின் வருகையால் கிழக்கு மாகாணத்தில் பாரிய அளவில் இளைஞர் யுவதிகளுக்கு தொழில் வாய்ப்புக்கள் கிட்டவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# கண்டி வயோதிப பெண்ணுக்கு ஒரே நாளில் இரு தடுப்பூசிகள்!

## தவறுதலாக செலுத்தப்பட்டதால் பரபரப்பு

**கொழும்பு, ஜுலை 23**

**கண்டியில் வயதான பெண்ணொருவருக்கு ஒரே நாளில் இரண்டு தடுப்பூசிகள் செலுத்தப்பட்டமை தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக மத்திய மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் நிஹால் வீரசூரிய தெரிவித்தார்.**

பேராதனை - ஒகஸ்டா தோட்டத்தைச் சேர்ந்த பெண் ஒருவர் தடுப்பூசி பெற்றுக்கொள்ளச் சென்றபோது, தற்செயலாக அவருக்கு இரண்டு தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன.

இதன் காரணமாக குறித்த பெண் சம்பவ இடத்தில் மயக்கமடைந்ததுடன், பல உபாதைகளுக்கும் உள்ளானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து, அங்கு அவருக்கு உடனடியாக ஆரம்பகட்ட சிகிச்சை அளிக்கப்பட்டதுடன், அதன் பின்னர் அவர் பேராதனை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தடுப்பூசி மையத்தில் தனக்கு இரண்டு முறை தடுப்பூசி செலுத்தப்பட்டதாக மருத்துவர்களிடம் தெரிவித்திருந்தார்.

மேலும், அவரது கணவர் இந்த விடயம் குறித்து சுகாதார அதிகாரிகளிடம் முறைப்பாடு அளித்துள்ளார்.

இந்த நிலையிலேயே, இந்த சம்பவம் குறித்து தனக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் முறையான விசாரணை நடத்தப்படும் என்றும் மத்திய மாகாண சுகாதார சேவைகள் இயக்குனர் நிஹால் வீரசூரியா தெரிவித்தார்.

உலகளவில் இவ்வாறான சம்பவம் இதற்கு முதல் பதிவாகியிருப்பதாக எவ்வித தகவல்களும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# 175,696 பேருக்கு புதனன்று கொரோனா தடுப்பூசிகள்

*கொழும்பு, ஜுலை 23*

இலங்கையில் நேற்று முன்தினம் மாத்திரம் மேலும் ஒரு இலட்சத்து 75 ஆயிரத்து 696 பேருக்கு கொரோனா தடுப்பூசிகள் செலுத்தப்பட்டன.

குறிப்பாக நேற்றுமுன்தினம் 42 ஆயிரத்து 814 பேருக்கு சீனாவின் சினோபார்ம் தடுப்பூசியின் முதலாவது டோஸ் செலுத்தப்பட்டுள்ளது.

மேலும் 5 ஆயிரத்து 165 பேருக்கு சினோபார்ம் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் செலுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை இதுவரை 3 இலட்சத்து 85 ஆயிரத்து 885 பேருக்கு கொவிசீல்ட் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் செலுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் இதுவரை ஒரு இலட்சத்து 59 ஆயிரத்து 81 பேருக்கு ஸ்புட்னிக் வீ தடுப்பூசியின் முதலாவது டோஸ் செலுத்தப்பட்டுள்ளது.

மேலும் 14 ஆயிரத்து 464 பேருக்கு ஸ்புட்னிக் வீ தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் செலுத்தப்பட்டுள்ளது.

அதேவேளை நேற்றுமுன்தினம் 16 ஆயிரத்து 252 பேருக்கு பைசர் தடுப்பூசியின் முதலாவது டோஸ் செலுத்தப்பட்டுள்ள நிலையில், இதுவரை 91 ஆயிரத்து 992 பேருக்கு பைசர் தடுப்பூசியின் முதலாவது டோஸ் செலுத்தப்பட்டுள்ளது.

அதேநேரம், நேற்றுமுன்தினம், ஒரு இலட்சத்து 11 ஆயிரத்து 465 பேருக்கு மொடர்னா தடுப்பூசியின் முதலாவது டோஸ் செலுத்தப்பட்ட நிலையில், இதுவரை 3 இலட்சத்து 49 ஆயிரத்து 848 பேருக்கு மொடர்னா தடுப்பூசியின் முதலாவது டோஸ் செலுத்தப்பட்டுள்ளது.

# இலஞ்சம் பெற முயன்ற சிப்பாய்கள் மூவர் கைது

*கொழும்பு, ஜுலை 23*

சிலாபம் மற்றும் சீதுவை பகுதிகளில் இரண்டு பேரிடம் இலஞ்சம் பெற முயன்ற இராணுவ சிப்பாய்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இதன்படி, சிலாபம் - மையக்குளம் பகுதியில் கஞ்சா மற்றும் ஹெரோயின் போதைப் பொருளை விற்பனை செய்து வந்த பெண் ஒருவரிடம் கப்பம் கோரிய இரண்டு இராணுவச் சிப்பாய்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் இருவரும் 15,000 ரூபா இலஞ்சம் பெற முற்பட்டபோதே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, சீதுவை பகுதியில் போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்ட ஒருவரிடம் இருந்து இலஞ்சம் பெற முயன்ற இராணுவச் சிப்பாய் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்நிலையில் கைது செய்யப்பட்ட மூவரையும் பணியிலிருந்து இடைநீக்கம் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக இராணுவத்தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

# 5 இலட்சம் அன்டிஜென் கருவிகளை இலங்கைக்கு வழங்கிய அமெரிக்கா

*கொழும்பு, ஜுலை 23*

கொவிட் 19 தொற்று நோயை மிக விவைாக கண்டறியும் 500,000 அதிவிரைவு பரிசோதனை கருவிகளை அமெரிக்கா இலங்கைக்கு நன்கொடையாக வழங்கியுள்ளது.

கொவிட்-19 இற்கு எதிரான 300 மில்லியன் இலங்கை ரூபா (1.5 மில்லியன் அமெரிக்க டொலர்) பெறுமதியான இப்பரிசோதனைகள், அமெரிக்க அரசாங்கத்தின் அபிவிருத்திக் கிளையான, அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்திக்கான முகவர் அமைப்பினூடாக இலங்கை சுகாதார அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ளன.

“வைரஸை மிகவிரைவாகக் கண்டறிவதை சாத்தியமாக்குவதன் மூலம், அமெரிக்க மக்களால் நன்கொடையாக வழங்கப்பட்ட இப்பரிசோதனைகள் இலங்கையில் உயிர்களைக் காப்பதுடன் பொதுச் சுகாதாரத்தினையும் பாதுகாக்க உதவும்” என்று அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்திக்கான முகவர் அமைப்பின் இலங்கை மற்றும் மாலைதீவுக்கான செயற்பணி இயக்குநர் ரீட் ஈஷ்லிமேன் கூறினார்.

“இந்த நன்கொடை இலங்கை அரசாங்கத்தின் பெருந்தொற்றுக்கான பதிலளிப்பிற்கு அமெரிக்கா வழங்கிய முந்திய உதவிகளின் அடிப்படையில் அமைவதுடன் எமது உறுதியான, நீண்டகால பங்காண்மையினையும் பிரதிபலிக்கிறது.” என்றும் அவர் குறிப்பிட்டார்.

# சண்டிலிப்பாய் பிரதேச செயலக வாயிலை முற்றுகையிட்டனர் கல்லுண்டாய் மக்கள்!

*யாழ்ப்பாணம், ஜுலை 23*

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தை வாயிலை மறித்து கல்லுண்டாய் பகுதி மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கல்லுண்டாயில் அமைக்கப்பட்டுள்ள வீடுகளை சுற்றி மழைக்காலங்களில் வெள்ளம் தேங்குவதால், அந்த பகுதியை மண் போட்டு உயர்த்தி தரும்படி மக்கள் கோரியிருந்தனர். அந்த கோரிக்கை இதுவரை நிறைவேற்றப்படவில்லை.

அத்துடன், வேறு சில கோரிக்கைகளையும் முன்வைத்து தொடர்ந்து அந்த பகுதி மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள்.

கடந்த மே 10ஆம் திகதியும் இவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது கொரோனா நிலவரத்தை காரணம் காட்டி பொலிஸார் ஆர்ப்பாட்டத்துக்கு அனுமதிக்கவில்லை.

இந்த நிலையில் அவர்கள் நேற்று மீண்டும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

‘பறந்தா செல்வது வீட்டுக்கு’ என எழுதிய பதாதைகள் உள்ளிட்ட பல்வேறு பதாதைகளையும் ஏந்தியிருந்தனர்.

(அ)



# சேதன பசளை உற்பத்திக்கு யாழில் இராணுவத்தினரின் புதிய தயாரிப்பு

*யாழ்ப்பாணம், ஜுலை 23*

சேதன பசளை உற்பத்திக்கு பயன்படும் இலை குழைகளை சிறு சிறு துண்டுகளாக்கும் “அக்ரி ஷ்ரெடர் பிபி 1” எனும் புதிய இயந்திரம் அண்மையில் இராணுவத்தினரால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த புதிய இயந்திரம் இராணுவத்தின் 4ஆவது மின் மற்றும் இயந்திர பொறியாளர்கள் படையணி மற்றும் 5ஆவது பொறியியலாளர் சேவை படையணியின் கூட்டு முயற்சியினால் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த அக்ரி ஷ்ரெடர் பிபி 1 இயந்திரம் ஒரு மணி நேரத்துக்கு 3.5 மெற்றிக் தொன் புதர்களை 10 மில்லி மீற்றர் துகள்களாக வெட்டக் கூடிய ஆளுமை கொண்டது என இராணுவ தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த வகை இயந்திரத்தின் சந்தை விலை ரூ. 750,000 ஆகும். ஆனால் மின் மற்றும் இயந்திர பொறியாளர்கள் படையணி மற்றும் பொறியியலாளர் சேவை படையணி யின் கூட்டு முயற்சியினால் உருவாக்கப்பட்ட இந்த இயந்திர தயாரிப்புக்கு சுமார் 150,000 ரூபா செலவாகியது.

இதை யாழ் - பாதுகாப்புப் படைத் தலைமையகத்தின் தலைமை அதிகாரி லெப்டினன்ட் கேணல் பி.டி.எல்.ஏ.சி சிறிசேன வடிவமைத்துள்ளார் என இராணுவம் தெரிவித்துள்ளது.

# சிறுவர் துஷ்பிரயோகத்துக்கு எதிராக கிளிநொச்சியில் நேற்றுப் போராட்டம்

*கிளிநொச்சி, ஜுலை 23*

பெண்கள் வாழ்வுரிமை சங்கத்தின் ஏற்பாட்டில் சிறுவர் துஷ்பிரயோகத்திற்கு எதிரான கவனயீர்ப்பு போராட்டம் நேற்று கிளிநொச்சியில் இடம் பெற்றது.

இந்த போராட்டம் நேற்று முற்பகல் 10 மணியளவில் ஏ - 09 வீதியில் அமைந்துள்ள கிளிநொச்சி மாவட்ட செயலகம் முன்பாக இடம்பெற்றது.




சிறுவர் மற்றும் பெண்களுக்கெதிரான வன்முறையை நிறுத்த கோரியும், குற்றவாளிகளைப் பாதுகாக்காது அவர்களுக்கு தண்டனை வழங்க கோரியும் குறித்த போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோசங்கள் எழுப்பினர்.

இதேவேளை, நீதிமன்ற சாட்சியங்களை அச்சுறுத்த வேண்டாம் எனவும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பதாதைகளை ஏந்தியிருந்ததுடன், கோசங்களையும் எழுப்பினர்.

சுமார் 30 நிமிடங்கள் இந்த கவனயீர்ப்புப் போராட்டம் சுகாதாரநடைமுறைகளை பின்பற்றி இடம்பெற்றது.

# இந்தியாவுக்கு பாதிப்பு ஏற்படுத்தவேமாட்டேன்

## அமைச்சர் டக்ளஸ் கூறுகிறார்



**கிளிநொச்சி, ஜூலை 23**

**நாட்டை விற்பதற்கோ அல்லது அண்டை நாடான இந்தியாவுக்கு பாதிப்பு ஏற்படும் வகையிலோ தான் ஒருபோதும் செயற்படமாட்டேன் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.**

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற பல்வேறு கலந்துரையாடல்களில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இதன்போது, சீன நிறுவனத்துக்கு பூநகரி கௌதாரிமுனையில் அட்டைப் பண்ணைக்கு அனுமதி வழங்கப்பட்டமை தொடர்பில் கருத்து தெரிவித்த அவர், "சீன நிறுவனத்தின் முதலீடுகளையும் தொழில்நுட்பத்தையும் பெற்று எமது மக்களுக்குப் பயன்படக்கூடிய வகையில் இது அமைக்கப்பட்டுள்ளது

மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தவோ அல்லது நாட்டை விற்கவோ அல்லது அண்டை நாடான இந்தியாவுக்கு பாதிப்பை ஏற்படுத்தவோ நான் ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை.

சீனாவின் தொழில்நுட்ப அறிவையும் பெற்று போரால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதே நோக்கமாகும்-என்றார்.



# சிறுவர் துஷ்பிரயோகத்துக்கு எதிராக முல்லைத்தீவில் நேற்று போராட்டம்

முல்லைத்தீவு, ஜூலை 23

சிறுவர் மற்றும், பெண்கள் மீது மேற்கொள்ளப்படும் துஷ்பிரயோகத்தைக் கண்டித்து முல்லைத்தீவு மாவட்ட செயலம் முன்பாக நேற்று கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது.

குறிப்பாக மலையகத்தைச் சேர்ந்த சிறுமியான இஷாலினியின் இறப்பிற்கான நீதியை முன்னிறுத்தி இந்த கண்டன ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது.

இவ்வார்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள்மலையகசிறுமிஇஷாலினியின் இறப்பிற்கு நீதி கோரும் வகையிலான பதாதைகளைத் தாங்கி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன், பெண்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுவதற்கு எதிரான பதாதைகள் மற்றும், சிறுவர்கள், வேலைக்கு அமர்த்தப்படுதல், துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்படுதல் என்பவற்றைக் கண்டிக்கும் வகையிலான பதாதைகளைத் தாங்கியவாறு அமைதியான முறையில் சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராசா, முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர் சின்னராசா லோகேஸ்வரன், முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் தலைவர் மரியசுரேஸ் ஈஸ்வரி, சூழலியல் மற்றும் சமூக அபிவிருத்திக்கான நிறுனப் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப்பலரும்கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# மன்னாரிலும் கவனவீர்ப்பு

வவுனியா, ஜூலை 23

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனின் வீட்டில் பணியாற்றிய இசாலினியின் மரணம் தொடர்பாக உரிய விசாரணைகள் பக்கச்சார் பின்றி இடம்பெறவேண்டும் என வலியுறுத்தி வவுனியாவில் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

மன்னார் மாவட்ட செயலகத்திற்கு முன்பாக நேற்று வியாழக்கிழமை காலை 9.30 மணியளவில் மன்னார் மெசிடோ நிறுவனத்தின் ஏற்பாட்டில், மன்னார் மாவட்ட பெண்கள் விழிப்புணர்வு சங்கத்தின் பங்களிப்புடன் குறித்த போராட்டம் இடம்பெற்றது.

கவனவீர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் பல்வேறு வசனங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.


குறிப்பாக வித்தியாவை அடுத்து இசாலினியா?, சிறுவர் பெண்கள் உரிமைகளுக்கு மதிப்பளித்து பாதுகாப்போம், பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு விரைவாக நீதி வழங்குங்கள், பெண்கள்-சிறுவர்களுக்கு எதிரான பாலியல் துஷ்பிரயோகத்தை தடுப்போம் உள்ளிட்ட பல்வேறு வசனங் கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# கொரோனா தொற்றிலிருந்து மேலும் 997 பேர் பூரண குணம்

கொழும்பு, ஜூலை 23

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி சிகிச்சைப் பெற்றுவந்த மேலும் 997 பேர் பூரண குணமடைந்து மருத்துவமனைகளில் இருந்து வீடு திரும்பியுள்ளதாக தேசிய தொற்று நோயியல் பிரிவு தெரிவித் துள்ளது.

அதன்படி, நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து பூரண குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 264,755ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# ரிஷாத் பதியுதீன் வீட்டில் பணிபுரிந்த மேலும் 2 பெண்களிடம் வாக்குமூலம்



கொழும்பு, ஜூலை 23

ரிஷாத் பதியுதீன் வீட்டில் பணிபுரிந்த 16 வயதுடைய சிறுமி உயிரிழந்த சம்பவம் தொடர்பில் சிறுமியின் தாயார் உட்பட மேலும் சிலரிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது.

ரிஷாத் பதியுதீன் வீட்டில் பணிபுரியும் மேலும் இருவரிடமும் வாக்குமூலம் பெறப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

குறித்த சிறுமியை சேவைக்கு இணைத்துக் கொள்வதற்கு முன்னர் சேவையில் இருந்த 21 மற்றும் 32 வயதுடைய பெண்கள் இருவரி டமே இவ்வாறு வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது.

# ஹெரோயினுடன் ஒருவர் சாவகச்சேரியில் சிக்கினார்

யாழ்ப்பாணம், ஜூலை 23

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மண்டுவில்-சோலை அம் மன் கோவிலடிப் பகுதியில் 2,100 மில்லிக்கிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் நேற்று முன்தினம் இரவு ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி பொலிஸ் நிலைய மது ஒழிப்புப் பிரிவினர் குறித்த கைது நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர்.

கைதான நபரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# ஆசிரியர்களின் சம்பளத்தை அதிகரித்தால் கடன் வளரும்

## அமைச்சர் பந்துல கூறுகிறார்



கொழும்பு, ஜூலை 23

அரச வரி வருமானத்தின் 86 வீதமான தொகை அரச ஊழியர்களின் சம்பளம் மற்றும் ஓய்வூதிய கொடுப்பனவுகளுக்கு செலவிடப்படுவதாகவும் அரச ஊழியர்களின் சம்பளம் அதிகரிப்பதாயின் பொதுமக்கள் மீது சுமத்தப்படும் வரி அதிகரித்தல், அரச சொத்துக்களை விற்பனை செய்தல் அல்லது கடன் வாங்குதற்கு நேரிடுமென வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

2020 ஆம் ஆண்டில் அரசாங்கத்திற்கு கிடைத்த வரி வருமானம் 1,216 பில்லியன் ரூபாக்களாவதுடன், 1,052 பில்லியன் ரூபா அரச ஊழியர்களின் சம்பளம் மற்றும் ஓய்வூதிய கொடுப்பனவுகளுக்காக செலவிடப்பட்டுள்ளதாகவும், அரச ஊழியர்களின் சம்பளக் கொடுப்பனவு செலுத்திய பின்னர் வரி வருமானத்தில் அரசாங்கத்திற்கு 164 பில்லியன் ரூபாக்கள் மாத்திரமே எஞ்சுவதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று முன் தினம் இடம் பெற்ற "வாழ்க்கைச்செலவு, பொருளாதாரம் மற்றும் ஏற்றுமதி ஊக்குவிப்பு" தொடர்பாக பொது மக்களைத் தெளிவூட்டும் செய்தியாளர் கலந்துரையாடலில் கலந்து கொண்டு அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

# அமெரிக்காவின் ஆதரவைப்பெற காய்நகர்த்துகின்றதா இலங்கை?

அகிலன்



**இலங்கையில் முகாம் அமைக்கும் அமெரிக்காவின் முயற்சிகளை 1980 களில் கடுமையாக எதிர்த்த இந்தியா, இப்போது அவ்வாறு எதிர்க்கும் நிலையில் இல்லை. அதிகரித்துள்ள சீனாவின் ஆதிக்கத்தை எதிர் கொள்வதற்கு இதனை ஏற்றுக் கொள்வதற்கு இந்தியா தயாராகவுள்ளது.**

பஸில் ராஜபக்ஷ நிதி, பொருளாதார அமைச்சராகப் பதவி யேற்றியிருக்கும் நிலையில், திருமலைத் துறைமுகத்தையும், அதனையடுத்துள்ள கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த சில பகுதிகளையும் குத்தகை அடிப்படையில் 5 வருடங்களுக்கு அமெரிக்காவுக்குக் கொடுப்பதற்கு இலங்கை திட்டமிட்டிருப்பதாக செய்தி ஒன்று வெளிவந்திருக்கின்றது. தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் என்ற சிங்களத் தேசியவாத அமைப்பினர் தான் இந்தச் செய்தியை வெளியிட்டு, கொழும்பு அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தி யிருக்கின்றனர்.

உத்தியோக பூர்வமாக இது குறித்த செய்திகள் வெளிவரவில்லை. தேசப் பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தகவலின் அடிப்படையில் தான் இப்போது கருத்துக்கள் வெளியிடப் படுகின்றன.

திருமலைத் துறை முகத்தின் மீது அமெரிக்காவுக்குள்ள அக்கறை இரகசியமானதல்ல. இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் இருக்கும் திருமலைத் துறை முகத்தை தமது கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வந்துவிட வேண்டும் என்பதில், 1970 களின் பிற்பகுதியில் இருந்தே அமெரிக்கா ஆர்வமாக இருந்திருக்கின் றது. அமெரிக்கா - சோவியத் யூனியன் பனிப்போர் உச்சத்திலிருந்த அந்தக் காலத் தில், ஆசியப் பிராந்தியத்தில் தமது தளங்களை அமைப்பதில் அமெரிக்கா அக்கறை காட்டி வந்தது என்பது அனைவருக்கும் நினைவிருக்கலாம்.

1977 இல் அதிகாரத்துக்கு வந்த ஜெயவர்த்தன அமெரிக்கா சார்பான ஒருவராகவே இருந் தமை அதற்கு வாய்ப்பாக இருந்தது. திருமலையை அவர் அமெரிக்காவுக்குக் கொடுக்கப் போகின்றார் என்ற கருத்துக்கள் பரவலாக வெளிவந்த அதே வேளையில், புத்தளம், இரணவில பகுதியில் வோய்ஸ் ஒப் அமெரிக் காவுக்கு ஜெயவர்த்தன இடமளித்திருந்தார். இவை அப்போது இந்தியாவுக்குத் தான் சீற்றத்தை ஏற்படுத்தியிருந்தது. 1987இல் கைச்சாத்திடப் பட்ட இலங்கை - இந்திய உடன்படிக்கையில் இதன் பிரதிபலிப்பையும் அவதானிக்கலாம். அதாவது, வெளிநாட்டுப் படைகள் தளம் அமைப்பதற்கு இலங்கை இடமளிக்கக் கூடாது என உடன்படிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அப்போது இருந்த பனிப்போர் நிலை இப்போது மாறிவிட்டது. அமெரிக்காவுக்கு எதிரான சோவியத் யூனியன் தலைமையிலான முகாமில் இந்தியா அப்போதிருந்தது. அந்த முகாம் இப்போது இல்லை. உலக ஒழுங்கு மாற்றமடைந்திருக்கும் பின்னணியில், சீனாவின் ஆதிக்கம் அதிகரித்திருக்கின்றது. சீனாவை எதிர் கொள்வது என்ற நிலையில்தான் இந்தியா இன்று அமெரிக்காவுடன் இணைந்து செயற் படுகின்றது. இலங்கையில் தன்னால் நேரடியாகச் செய்ய முடியாத சிலவற்றை அமெரிக்காவின் மூலமாகச் செயற் படுத்துவதற்கு இந்தியா முற்பட்டிருப்பதும் தெரிகின்றது.

இலங்கையில் முகாம் அமைக்கும் அமெரிக்காவின் முயற்சிகளை 1980 களில் கடுமையாக எதிர்த்த இந்தியா, இப்போது அவ்வாறு எதிர்க்கும் நிலையில் இல்லை. அதிகரித்துள்ள சீனாவின் ஆதிக்கத்தை எதிர் கொள்வதற்கு இதனை ஏற்றுக் கொள்வதற்கு இந்தியா தயாராகவுள்ளது. திருமலையில் உள்ள பாரிய எண்ணைக் குதங்கள் தற்போது இந்தியாவிடம் தான் உள்ளது. இந்த நிலையில், சீனாவின் ஆதிக்கத்தை திருமலையில் முழுமையாகத் தவிர்த்துக் கொள்வதற்கு அமெரிக்காவின் பிரசன்னத்தை இந்தியா ஏற்றுக் கொள்ளலாம் என இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சீனாவுடனான இலங்கையின் நெருக்கமான உறவுகள் சர்வதேச மட்டத்தில் இலங்கைக்குப் பெரும் நெருக்கடியை ஏற்படுத்தி யிருந்தமை வெளிப்படை. குறிப்பாக, அமெரிக்கக் காங்கிரஸில் அண்மையில் கொண்டு வரப்பட்ட இலங்கை குறித்த பிரேரணையின் பின்னணியும் இதுதான். பொறுப்புக்கூறல் உட்பட பல விடயங்களை உள்ளடக்கியதாக இந்தப் பிரேரணை அமைந்திருந்த போதிலும், தமது பூகோள அரசியல் இலக்குகளை அடைவதற்கான உபாயமாக தமிழர்களுடைய பிரச்சினையை அந்த நாடுகள் பயன்படுத்தி யிருக்கின்றன என்பதே உண்மை. இந்த வகையில், திருமலையை நீண்ட கால குத்தகையில் அமெரிக்காவுக்குக் கொடுப்பதன் மூலம், மேற்குலகின் அழுத்தங்களை எதிர் காலத்தில் தவிர்த்துக் கொள்ள முடியும் என்பது இலங்கையின் உபாயமாக இருந்திருக்கலாம்.

மோசமடைந்துள்ள இலங்கையின் மேற்கு நாடுகளுடனான உறவுகளைச் சீரமைக்கக் கூடிய ஒன்றாகவே பஸில் ராஜபக்ஷவின் மீள் வருகை எதிர் பார்க்கப்பட்டது. அமெரிக்கப் பிரஜாவுரிமையைப் பெற்றிருக்கும் பஸில் ராஜபக்ஷ, மேற்குலகுடனான உறவுகளைச் சீரமைக்கக் கூடிய ஒருவராக மட்டுமன்றி, மோசமடைந்திருக்கும் நிதி, பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கக் கூடிய ஒருவராகவும் பார்க்கப் படுகின்றார். அமெரிக்காவில் ஒரு மாத காலம் தங்கியிருந்த அவர், கொழும்பு திரும்பி அமைச்சராகவும், பாராளுமன்ற உறுப்பினராகவும் பதவியேற்றிருக்கும் நிலையில் தான் திருமலையை அமெரிக்காவுக்குக் கொடுப்பது குறித்த தகவல்கள் வெளி வந்திருக்கின்றன.

அதிகாரத்திலுள்ள ராஜபக்ஷக்களைப் பொறுத்த வரையில் கோட்டாபயவும், மகிந்தவும் ஏதோ ஒரு வகையில் போர்க் குற்றங்களுடன் சம்பந்தப்பட்டதாக குற்றஞ்சாட்டப்படு பவர்கள். அதனைவிட, சீனாவுடன் நெருக்கமானவர்கள் என அடையாளம் காணப் பட்டவர்கள். ஆனால், பஸில் ராஜபக்ஷ அவ்வாறானவர் அல்ல. மேற்குலகுடன் மட்டுமன்றி, இந்தியா வுடனும் நெருக்கமான உறவைக் கொண்டிருப்பவர். அந்த வகையில், இந்தியாவுடனும், சீனாவுடனுமான உறவுகளைச் சீராக்கக் கூடிய ஒருவராகவே பஸில் ராஜபக்ஷ அடையாளம் காணப்படுகின்றார்.

திருகோணமலைத் துறைமுகத்திற்கு அருகில் எண்ணெய் சுத்திகரிப்புத் திட்டத்தை முன்னெடுக்கவே அமெரிக்க நிறுவனம் நல்லாட்சி அரசாங்கக் காலத்தில் திட்டமிட்டு, அமெரிக்காவின் மிலேனிய உடன்படிக்கை பொதுஜன பெரமுன அரசாங்கத்தால் நிராகரிக்கப் பட்ட சூழலிலேயே இலங்கையுடனான அமெரிக்க உறவும் பெரும் நெருக்கடிக்குள் நகர்ந்தது. அதனையடுத்தே, இலங்கைத் தமிழருக்கு ஆதரவாக அமெரிக்காவின் நகர்வுகள் அமைந்திருந்தன. இந்நிலையில் தான், திருகோணமலைத் துறைமுக உடன்படிக்கை தற்போது எட்டப்பட்டுள்ளதாகச் சொல்லப்படுகின்றது. இது மில்லேனிய உடன்டிபடிக்கைக்கு மாற்றானதாக அமையலாம் என்ற கருத்து அரசியல் ஆய்வாளர் ஒருவரால் முன்வைக்க ப்பட்டுள்ளது.

இதனைவிட கெரவலப்பிட்டி அனல் மின் நிலையத்திலும் அமெரிக்கா முதலிடவிருப்பதாக ஜே.வி.பி. குறிப்பிடுகின்றது. அமெரிக்காவுக்கு இங்கு 40 வீத பங்குகள் வழங்கப்படவிருப்பதாக ஜே.வி.பி.யின் தகவல் ஒன்று தெரிவித்தது.

திருகோணமலைத் துறைமுக உடன்படிக்கை எனத் தகவல்களை வெளிப்படுத்தியுள்ள தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் அறிக்கையில், “இலங்கை அரசாங்கம் செய்து கொள்ள உத்தேசித்துள்ள உடன் படிக்கையானது ரணில் - மைத்திரி தலைமையிலான அரசாங்கம் செய்து கொள்ளவிருந்த எம்.சி.சி உடன் படிக்கையைவிட பயங்கரமானது” எனக் குறிப்பிட்டுள்ளமையும் கவனிக்கத் தக்கது. இது அமெரிக்காவுடான உடன்படிக்கையாக இருந்தாலும், இந்தியா, ஜப்பான் ஆகியனவும் இதில் சம்பந்தப்பட்டிருப்பதாக தேசப் பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவித்துள்ளது.

திருகோணமலைத் துறை முகத்தை 3000 மில்லியன் டொலர்களுக்கு அமெரிக்காவுக்கு ஐந்து வருட குத்தகை என்கிற அடிப்படையில் வழங்க இலங்கை அரசாங்கம் இணக்கம் வெளியிட்டிருப்பதாக அந்தத் தகவலில் தெரிவிக்கப் பட்டுள்ளது. சீனாவின் ஒரே சுற்று ஒரே பாதை முன் முயற்சிக்கு எதிராக அமெரிக்காவால் கட்டமைக்கப்பட்ட இந்தோ பசுபிக் தந்திரோ பாயத்தின் பாதுகாப்பை உறுதி ப்படுத்தும் உத்திகளில் ஒன்றாகவே திருகோணமலைத் துறைமுகத்தை அமெரிக்கா இலங்கை அரசாங்கத்திடம் இருந்து குத்தகைக்கு எடுக்கவுள்ள தாகவும் கூறப்படு கின்றது. இந்த தக வலை தேசப் பற்றுள்ள தேசிய இயக்கம் வெளியிட்டுள்ளது.



அமெரிக்காவைச் சேர்ந்த நிறுவனமொன்றினால் 3000 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீட்டுப் பெறுமதியாக இந்த உடன்படிக்கை செய்யப்படவுள்ளது என்று ஜுலை 12ஆம் திகதி வெளியிட்டுள்ள அறிக்கை ஊடாக தேசப் பற்றுள்ள தேசிய இயக்கத்தின் செயலாளர் வசந்த பண்டார தெரிவித்திருந்தார். திருகோணமலைத் துறை முகத்திற்கு அருகில் எண்ணெய் சுத்திகரிப்பு திட்டத்தை முன்னெடுக்கவே அமெரிக்க நிறுவனம் முன்வந்திருப் பதாகவும் அவ் அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. வெளியாகியுள்ள இந்தச் செய்தி சரியானதாக இருந்தால், அமெரிக்க இலங்கை இடையே 2019ஆம் ஆண்டுக்கு பின்னர் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளைச் சீராக்குவதற்காக இலங்கை அரசு முன்னெடுத்துள்ள முக்கிய நகர்வாக இது இருக்கும். இலங்கைக்கும் மேற்கு நாடு களுக்கும் இடையிலான உறவுகளை சீரமைக்க இது உதவும்.

இதன்மூலம் இரண்டு விதமான நலன்களை இலங்கை எதிர் பார்க்கலாம். ஒன்று - மேற்கு நாடுகளின் அழுத்தங்கள் பெருமளவுக்கு குறையும். இரண்டாவது - பொருளா தாரப் பிரச்சினைகள் அனைத்துக்கும் சீனாவைத்தான் இலங்கை நம்பியிருக்கின்றது. மேற்கு நாடுகளின் உறவுகளைச் சீரமைப்பதன் மூலமாக தற்போதைய பொருளாதார நெருக்கடிகளுக்கும் தீர்வைக் காண முடியும். அதே வேளையில், இது ஐந்து வருட காலத்துக்கான உடன்படிக்கையாக இருப்பதால், அதன் பின்னர் அமெரிக்காவை அனுப்பிவிட்டு சீனாவுடன் தொடர்ந்து பயணிக்க முடியும் எனவும் விமர்சகர் ஒருவர் குறிப்பிடுகின்றார். ■



# தி.மு.கவுக்கு மாற்று பா.ஜ.க.வா? சர்ச்சையை உருவாக்கிய கருத்து

> பா.ஜ.க தொண்டர்களுக்காக அண்ணாமலை அப்படிப் பேசியிருக்கலாம். ஆனால், நிலைமை அவ்வாறாக இல்லை. சட்ட மன்றத்தில் யார் ஆளும் கட்சி, யார் எதிர்க்கட்சி என்றுதான் பார்க்கப்படும். அவர்களுக்குப் பலம் இருக்கிறதா, இல்லையா என்பதை இன்னொரு தேர்தலில்தான் பார்க்க முடியும்.

**ஆ. விஜயானந்த்**

"தமிழகத்தில் தி.மு.கவுக்கு மாற்று பா.ஜ.கதான்" என தமிழ்நாடு பா.ஜ.க மாநில தலைவர் அண்ணாமலை வெளியிட்ட கருத்து அரசியல் வட்டாரத்தில் விவாதத்தைத் தூண்டியிருக்கிறது. ஹஅண்ணாமலைக்கு அரசியல் முதிர்ச்சியில்லை' என சாடுகிறார் அ.தி.மு.க முன்னாள் அமைச்சர் வைகைச்செல்வன். உண்மையில் தி.மு.கவுக்கு மாற்று பா.ஜ.கதானா?

சென்னை தியாகராய நகரில் உள்ள பா.ஜ.கவின் தலைமை அலுவலகமான கமலாலயத்தில் செவ்வாய்க்கிழமை மாநில தலைவர் அண்ணாமலை செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர், "தமிழகத்தில் தி.மு.கவுக்கு மாற்றாக பா.ஜ.க உள்ளது. "திமுகவின் விமர்சனங்கள் அனைத்தும் பா.ஜ.கவை எதிர்த்தே முன்வைக்கப்படுகின்றன. பேச்சு அரசியலில் அவர்களுக்கு நாங்கள்தான் எதிரி. எங்களுக்கு அவர்கள்தான் எதிரி. எங்கள் இரண்டு பேருக்கும் இடையில்தான் யுத்தம் நடக்கிறது. இது இரு முனைப் போட்டியாக சென்று கொண்டிருக்கிறது" என்றார்.

அப்போது அ.தி.மு.க கூட்டணி குறித்து செய்தியாளர்கள் கேள்வி எழுப்பியபோது, "அ.தி.மு.க, பா.ஜ.க கூட்டணி சிறப்பாகச் சென்று கொண்டிருக்கிறது" என அவர் பதில் அளித்தார். தொடர்ந்து மதுரையில் செய்தியாளர்களிடம் பேசும்போதும், "தி.மு.கவுக்கு எதிரி பா.ஜ.க என்ற அடிப்படையில் அரசியல் களம் நகர்ந்து கொண்டிருக்கிறது. தி.மு.க ஆட்சியின் தவறுகளைச் சுட்டிக் காட்டும்போது மக்கள் எங்கள் பக்கம் வருவார்கள். பிரதமர் மோதியின் நலத் திட்டங்களால் தமிழகத்தில் மூன்றரை கோடி பேர் பலன் அடைந்துள்ளனர். இதனால் வரும் தேர்தலில் எங்களுக்கு வெற்றிவாய்ப்பு கிடைக்கும்" என்றார்.

### தே.மு.தி.கவுக்கு கிடைத்த வாய்ப்பு

"தி.மு.கவுக்கும் பா.ஜ.கவுக்கும்தான் இரு முனைப் போட்டி நிலவுகிறதா?" என அ.தி.மு.க செய்தித் தொடர்பு செயலாளரும் முன்னாள் அமைச்சருமான வைகைச்செல்வனிடம் பிபிசி தமிழுக்காக பேசினோம்.

"புதிதாகத் தலைவராகப் பொறுப்பேற்றதால் அவர் ஒரு கருத்தை வெளியிட்டிருக்கிறார். தேர்தலில் 66 இடங்களில் வென்று பலமான எதிர்கட்சியாக அ.தி.மு.க உள்ளது. அ.தி.மு.கவுக்கும் தி.மு.கவுக்கும் இடையில்தான் நேரடிப் போட்டி உள்ளது. நாங்கள் ஏற்கெனவே 7 முறை ஆட்சியில் இருந்திருக்கிறோம். 50 ஆண்டுகால பொன்விழாவை கொண்டாட இருக்கிறோம். அப்படியிருக்கும்போது இந்த இரு கட்சிகளுக்கும் இடையில்தான் போட்டியே தவிர, வேறு எந்த கட்சியும் இதில் சொந்தம் கொண்டாட முடியாது. இரு முனைப் போட்டி என்பது சரியான ஒன்று அல்ல. 66 இடங்களில் வென்ற எதிர்கட்சியைக் குறைத்து மதிப்பிட முடியாது" என்கிறார் வைகைச்செல்வன்.

"சசிகலா பேச்சு உள்பட சில காரணங்களால் அ.தி.மு.கவில் குழப்பம் நீடிப்பதால், அதனை பா.ஜ.க தனக்கு சாதகமாக தக்க வைத்துக் கொள்ள முயல்கிறதா?" என்று கேட்டோம்.

"அனைத்து கட்சிகளும் தன்னைத் தக்கவைத்துக் கொள்ளவே முயலும். தகுதியுள்ளது தப்பிப் பிழைக்கும். வெற்றிடத்தைக் காற்று நிரப்பும். "ஜெயலலிதா மறைந்த பிறகு அ.தி.மு.க இருக்காது" என்று கூறினார்கள். நான்கு வருடங் களாக இ.பி.எஸ்ஸும் ஓ.பி.எஸ்ஸும் ஆட்சியைக் கொண்டு சென்றனர். தற்போது எதிர்கட்சி நிலையில் இருக்கிறோம். ஒரு பலவீனமான எதிர்க் கட்சியாக நாங்கள் இல்லையே. 2011 ஆம் ஆண்டு தே.மு.தி.கதானே எதிர்க்கட்சியாக இருந்தது. அந்த வாய்ப்பு தி.மு.கவுக்குக்கூட கிடைக்கவில்லையே. 2016 ஆம் ஆண்டு எதிர்க்கட்சியாக வந்த தி.மு.க, 2021 ஆம் ஆண்டு ஆட்சியைப் பிடித்தார்கள்.

அதேநேரம், மக்களின் செல்வாக்கு என்பது அ.தி.மு.க பக்கம்தான் உள்ளது. சட்டமன்றத் தேர்தலில் முப்பதுக்கும் மேற்பட்ட இடங்களில் சொற்ப வாக்குகள் வித்தியாசத்தில்தான் வெற்றிவாய்ப்பை இழந்தோம். தற்போது தேர்தல் முடிந்து 3 மாதங்கள்கூட நிறைவடையவில்லை. அதனால் எந்தக் கருத்துகளையும் கூறாமல் இருக்கிறோம். சட்டமன்றத்தில் பலம் .வாய்ந்த எதிர்கட்சியாக அ.தி.மு.க பணியாற்றும். போலியான வாக்குறுதிகளைக் கூறி தி.மு.க ஆட்சியைப் பிடித்துவிட்டது என்பதை மக்களிடம் கூறுவோம். மற்றபடி, சசிகலாவுக்கு அ.தி.மு.கவில் பெரியளவில் ஆதரவு இல்லை. அப்படியொரு தோற்றத்தை முனைந்து ஏற்படுத்தப் பார்க்கிறார்கள்.

பா.ஜ.க தொண்டர்களுக்காக அண்ணாமலை அப்படிப் பேசியிருக்க லாம். ஆனால், நிலைமை அவ்வாறாக இல்லை. சட்டமன்றத்தில் யார் ஆளும்கட்சி, யார் எதிர்க்கட்சி என்றுதான் பார்க்கப்படும். அவர்களுக்குப் பலம் இருக்கிறதா, இல்லையா என்பதை இன்னொரு தேர்தலில்தான் பார்க்க முடியும். அண்ணாமலையின் பேச்சை, அரசியல் முதிர்ச்சியற்ற பேச்சாகத்தான் பார்க்க முடிகிறது" என்கிறார்.

### பா.ஜ.கவின் கிளைக் கழகமா அ.தி.மு.க?

"தி.மு.கவுக்கும் பா.ஜ.கவுக்கும் இடையில்தான் போட்டி நிலவுகிறதா?" என தி.மு.க சட்டத்துறை இணைச் செயலாளர் வழக்கறிஞர் வீ.கண்ணதாசனிடம் பிபிசி தமிழுக்காக பேசினோம்.

"உண்மைதான். அ.தி.மு.கவும் பா.ஜ.கவும் வேறு வேறல்ல என்பதை அண்ணாமலை முழுமையாக ஒப்புக் கொண்டுள்ளார். ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு பா.ஜ.கவின் கிளைக் கழகமாக அ.தி.மு.க மாறிவிட்டது என்பதைத்தான் அவர் இவ்வாறாகக் குறிப்பிடுகிறார். அதனால்தான், ஹகளத்தில் நாங்கள் இருக்கிறோம்' என்கிறார்.

அ.தி.மு.கவில் இரண்டு அணிகளும் ஒன்றிணைகிறதோ இல்லையோ பா.ஜ.கவோடு அ.தி.மு.க ஒன்றிணைந்து விட்டது. ஆனால், கருத்தியல்ரீதியாக அவர்களது செயல்பாடுகள் தவறு என்பதால்தான் தேர்தலில் மக்கள் அவர்களை நிராகரித்தார்கள். அ.தி.மு.கவில் திராவிடம் என்ற ஒரு வார்த்தை இருப்பதால்தான் அவர்களால் 66 இடங்களில் வெற்றி பெற முடிந்தது. தவிர, அவர்களிடம் பணபலம் இருந்ததும் ஒரு காரணம். கொங்கு மண்டலத்தில் சாதியரீதியாக செயல்பட்டார்களே தவிர, மக்கள் முழுமையாக அவர்களை ஏற்றுக் கொள்ளவில்லை," என்கிறார்.

தொடர்ந்து பேசுகையில், "செய்தியாளர் சந்திப்பில் அண்ணாமலை பேசும்போது, "2026 ஆம் ஆண்டுக்குள் 150 இடங்களைப் பிடிப்போம்' என்கிறார். அது ஒவ்வொரு கட்சியும் காணக் கூடிய கனவுதான். ஹஊடகங்களை 6 மாதங்களுக்குள் எங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவோம்' எனப் பேசிவிட்டு, பின்னர் அதை மறுத்துப் பேசினார். அதேநேரம், தமிழ்நாட்டில் தி.மு.கவுக்கு எதிர்கட்சிகளே இல்லை என்றெல்லாம் நான் கூற விரும்பவில்லை. எதிர்கட்சி என்ற ஒன்று இருந்தால்தான் ஆளும் ட்சி ஆரோக்கியமாக செயல்பட முடியும். அதற்கு பா.ஜ.கதான் ஒரே வழியா என்றால் நிச்சயமாக இல்லை," என்றார் கண்ணதாசன்.

### பா.ஜ.க தனித்துப் போட்டியிடுமா?

இங்கு இடதுசாரிகள், வி.சி.க, ம.தி.மு.க, நாம் தமிழர் என பல்வேறு கட்சிகள் இருக்கும்போது, நாங்கள்தான் எதிர்கட்சி என பா.ஜ.க கூறுவது, "நானும் ரௌடிதான்' என்ற வடிவேலு நகைச்சுவை காட்சியைத்தான் நினைவூட்டுகிறது. மத்தியில் ஆளும்கட்சியாக இருப்பதை வைத்துக் கொண்டு அண்ணாமலை இப்படி பேசுகிறார். சட்டமன்ற தேர்தலில் 4 இடங்களில் அவர்கள் வென்றதற்குக் காரணம், அ.தி.மு.க வாக்குகளை அடிப்படையாக வைத்துப் போட்டியிட்டதால்தான். சட்டமன்ற தேர்தலில் தனித்துப் போட்டியிட்டிருந்தால் பா.ஜ.கவின் பலம் என்னவென்பது தெரிந்திருக்கும்.

நாடாளுமன்ற தேர்தலில் பல லட்சம் வாக்குகளில் அவர்கள் ஒவ்வொருவரும் தோற்றார்கள். தமிழ்நாட்டில் பா.ஜ.க என்பது நிராகரிக்கப்பட்ட கட்சியாக உள்ளது. தேசியக் கட்சி என்றால் அனைத்து மாநிலங்களையும் ஒன்றாகப் பார்க்க வேண்டும். தமிழ்நாட்டையும் கர்நாடகாவையும் அவர்கள் ஒன்றாகத்தான் பார்க்கிறார்களா? "காவிரி பிரச்னையில் கர்நாடகா பக்கம் இருப்பேன்' என்று கூறிய அண்ணாமலை, இப்போது வேடம் போட்டுக் கொண்டிருக்கிறார்" என்கிறார்.

### அ.தி.மு.கவை தி.மு.க மதிக்கிறதா?

பா.ஜ.க மீது அ.தி.மு.கவும் தி.மு.கவும் முன்வைக்கும் குற்றச்சாட்டுகள் குறித்து, தமிழ்நாடு பா.ஜ.க மாநில பொருளாளர் எஸ்.ஆர்.சேகரிடம் பிபிசி தமிழுக்காக பேசினோம்.

"சட்டமன்றத்தில் அ.தி.மு.கவை எதிர்கட்சியாக நினைத்திருந்தால், அவர்களை குறிவைத்துத்தான் தி.மு.க விமர்சனங்களை முன்வைத்திருக்க வேண்டும். திமுகவினர் பா.ஜ.கவை நோக்கித்தான் கூறினர். அப்படியானால் அ.தி.மு.க என்றொரு கட்சியே தி.மு.கவுக்குத் தென்படவில்லையா. பா.ஜ.கவை நோக்கி குற்றச்சாட்டுகளை வைத்தால்தான் அ.தி.முக வலுவிழக்கும் என்று நினைக்கிறார்களா? அ.தி.மு.க-பா.ஜ.க உறவு என்பது இன்றைக்குப் பலமாக இருக்கிறது, அதில் எந்தப் பிரச்னையும் இல்லை என அனைத்து ஊடக சந்திப்புகளிலும் அண்ணாமலை தெளிவாகக் கூறிவிட்டார்.

மேலும், 150 இடங்களில் வெற்றி பெறப் போவது பற்றிப் பேசும்போது, "எந்தக் கட்சிக்கும் தனியாக ஆட்சியமைக்கும் ஆசை இருக்கும், அதனை நோக்கிப் பயணிக்கிறோம்' என்றார். இன்றைக்குக் கூட்டணி சரியாக இருக்கிறது. நாளை 150 இடங்களில் பா.ஜ.க வெல்ல இருக்கிறது. இவை இரண்டுக்கும் இடைப்பட்ட பகுதியில் அவரவர் விருப்பத்துக்கேற்ப என்ன வேண்டுமானாலும் எழுதிக் கொள்ளலாம். தி.மு.கவுக்கு பா.ஜ.க பற்றிப் பேசுவதற்கு எந்தத் தகுதியும் இல்லை. உண்மையிலேயே தி.மு.கவுக்கு தைரியம் இருந்தால் எதிர்க்கட்சியான அண்ணா தி.மு.கவை எதிர்த்து தங்கள் எதிர்ப்பைத் தெரிவிக்க முயலுமா? அப்படிச் செய்தால்தான் அ.தி.மு.கவை எதிர்கட்சியாக தி.மு.க நினைக்கிறது என்று பொருள்" என்கிறார்.

**- பி.பி.சி.**

# புலமைச் சிகரம்

**ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி**

மாதிரிப் பரீட்சை
வினாத்தாள் - II

நேரம் - 45 நிமிடம்

**01) பின்வரும் பந்தியை நன்றாக வாசிக்கவும்**

எமது பேருந்து சற்று நேரத்தில் பேராதனையைக் கடந்து கொழும்பு வீதியை வந்தடைந்தது. வீதியின் இரு மருங்கிலிருந்தும் பாதசாரிகள் கையசைத்து எமக்கு வாழ்த்துத் தெரிவித்தனர். சிறிது தூரம் சென்றதும் கடுகண்ணாவ மலைத் தொடர் தென்படத் தொடங்கியது. கிழக்கு வானில் சூரியன் தகதகவென மின்னியபடி அம் மலைத் தொடர்களுக்கிடையே எட்டிப் பார்த்தான். தூரத்தே தெரியும் வீதிகள் பாம்புகள் வைளந்து செல்வது போலக் காட்சியளித்தன. இவ்வாறாக, நாம் இயற்கையின் விந்தைகளையும் அழகையும் இரசித்தபடி கொழும்பு நகரை வந்தடைந்தோம்.

**கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை பந்தியில் இருந்து தெரிந்தெடுத்துப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

i) பேருந்தில் சென்ற போது தென்பட்ட மலைத் தொடர் எது?

........................................................................................................

ii) தன்மைப் பன்மைப் பெயர்ச் சொல் ஒன்றை எழுதுக.

........................................................................................................

iii) பந்தியில் வரும் இரட்டைக் கிளவிச் சொல் ஒன்று எழுதுக.

........................................................................................................

iv) உவமைத் தொடரினை எழுதுக.

........................................................................................................

v) சினைப் பெயர் ஒன்று எழுதுக.

........................................................................................................

vi) சர்ப்பங்கள் என்பதன் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக.

........................................................................................................

**02) பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து புள்ளிக் கோட்டில் எழுதுக.**

i) போக்குவரத்துப் பொலிசார் ........................... (வலப்பக்கமாகச் / வளப்பக்கமாகச்) செல்லுமாறு கூறினார்.

ii) விவசாயிகள் மண்ணை .......................... (வழமாக்கினர் / வளமாக்கினர்)

**03) தரப்பட்ட சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமொன்று எழுதுக.**

i) கற்றுக் / கோபத்தைக் / வாழலாம் / கொண்டால் / கட்டுப்படுத்தக் / சிறப்பாக

**04) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய், பயனிலைத் தொடர்பு சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (✗) எனவும் எதிரேயுள்ள அடைப்புக் குறிக்குள் அடையாளம் இடுக.**

i) காற்று வேகமாக வீசியதால் மரங்கள் ஒன்றுடன் ஒன்று உரசின. ( )

ii) மான் கூட்டம் சிதறி ஓடின. ( )

iii) மாணவர்கள் பாடசாலைச் சஞ்சிகைக்கு ஆக்கங்கள் வழங்கினர். ( )

iv) தங்கை காலையில் விழித்தெழுவார்கள். ( )

**05) பின்வரும் தொடர்மொழிக்குரிய தனிச் சொல்லைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.**

i) முனிவர்கள் வசிக்குமிடம் - ........................................................................

ii) வீண் செலவு செய்பவன் - ........................................................................

**06) பொருத்தமான நிறுத்தக் குறிகளை இடுக.**

i) அவர் தம் கல்வியின் சிறப்புத் தான் என்னே

ii) அந்தப் பாறையில் குரங்கு மான் சிங்கம் ஆகியவற்றின் உருவங்கள் கூட செதுக்கப்பட்டுள்ளன

**07) சரியாக எழுதப்பட்ட சொல்லின் கீழ்க் கோடிடுக.**

| | | |
|---|---|---|
| i) நோயாலி | i) நோயாளி | i) நோயாழி |
| ii) சிகைக்காய் | ii) சீயாக்காய் | ii) சியக்காய் |
| iii) சவுக்காரம் | iii) சவர்க்காரம் | iii) சவக்காரம் |
| iv) ஆராட்சி | iv) ஆராய்சி | iv) ஆராய்ச்சி |

**08) பின்வரும் கருத்துக்களை விளக்கும் பழமொழிகளைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

i) சந்தர்ப்பத்தைத் தவறவிடாதே.

........................................................................................................

ii) வறுமையிலும் செம்மையாக வாழ்.

........................................................................................................

**09) பின்வரும் வாக்கியங்களை எழுத்து மொழியில் எழுதுக.**

i) ஆசிரியர் எனக்குப் பரிசு குடுத்தார்.

........................................................................................................

ii) நான் தினமும் காலையில் தண்ணி குடிப்பன்

........................................................................................................

10) பின்வரும் பாடலடியைப் பூர்த்தி செய்க.

தாகம் ................................ நுங்கு
தண்ணீர் போல நுங்கு

11) பின்வரும் ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.

i) 

........................................

ii) 

........................................

12) பின்வரும் ஆங்கிலச் சொற்களின் கருத்தை தமிழில் எழுதுக.

i) Play ground ....................................

ii) Hospital ........................................

13) பின்வரும் சொற்களைச் சரியாக ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியங்களாக எழுதுக.

i) drinking / am / I / water

........................................................................................................

ii) This / car / is / small / a

........................................................................................................

# குடாநாட்டில் கொரோனாவால் ஒரே நாளில் ஐவர் உயிரிழப்பு

## மொத்த மரணம் 117 ஆக அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 23

**யாழ்ப்பாணம் மாவட்டத்தில் ஒரே நாளில் 5 கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.**

யாழ். மாவட்ட செயலகத்தின் கொரோனா அறிக்கையிடல் பிரிவினரால் நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்ட நாளாந்த மாவட்ட கொரோனா நிலவர அறிக்கையில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் ஜூலை மாதத்தின் 21 நாட்களில் கொரோனாத் தொற்று காரணமாக உயிரிழந்தவர்களது எண்ணிக்கை 22 ஆக உயர்வடைந்துள்ளது.

இதையடுத்து யாழ். மாவட்டத்தில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் மொத்தத் தொகை 117 ஆக உயர்வடைந்துள்ளது. அந்தவகையில், யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவில் 35 பேரும், கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 14 பேரும், நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் 12 பேரும், உடுவில் பிரதேச செயலர் பிரிவில் 10 பேரும், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 10 பேரும், சங்கானை பிரதேச செயலர் பிரிவில் 09 பேரும் உயிரிழந்துள்ளனர்.



அதேவேளை, பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் 08 பேரும், தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் 06 பேரும், வேலணை பிரதேச செயலர் பிரிவில் 04 பேரும், கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் 03 பேரும், சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் 03 பேரும், காரைநகர் பிரதேச செயலர் பிரிவில் 02 பேரும், ஊர்காவற்துறை பிரதேச செயலர் பிரிவில் ஒருவரும் உயிரிழந்துள்ளனர். (இ - 03)

## நாவற்குழியில் இராணுவச் சிப்பாய் தன்னைத்தானே சுட்டு தற்கொலை!

யாழ்ப்பாணம், ஜூலை 23

யாழ்., நாவற்குழியில் இராணுவச் சிப்பாய் தன்னைத்தானே சுட்டு தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

நேற்று அதிகாலை நாவற்குழி தெற்கு கெமுனு வோச் படைப்பிரிவு படை முகாமில் கடமையில் இருந்த இராணுவச்சிப்பாயே இவ்வாறு தற்கொலை புரிந்துள்ளார்.

குறித்த சிப்பாய் இராணுவத்தில் இணைந்து கடந்த 10 மாதங்களே ஆகியுள்ள நிலையில் வீட்டில் ஏற்பட்டுள்ள குழப்பநிலை காரணமாகவே தற்கொலை செய்துகொண்டுள்ளார் என ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் இராணுவப் பொலிஸாரும் சாவகச்சேரி பொலிஸாரும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

மரண விசாரணையின் பின்னர் உயிரிழந்த சிப்பாயின் சடலம் பெற்றோரிடம் ஒப்படைக்கப்படவுள்ளது என இராணுவத் தரப்பால் தெரிவிக்கப்பட்டது. (இ - 03)

## மின்சாரத் தாக்குதலுக்கு இலக்காகி இரு பிள்ளைகளின் தந்தை மரணம்

புத்தளம், ஜூலை 23

புத்தளம் மாவட்டம், கருவலகஸ்வெவ - முரியாக்குளம் பிரதேசத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவர், மின்சாரத் தாக்குதலுக்கு இலக்காகி பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார் என்று கருவலகஸ்வெவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

முரியாக்குளம் பிரதேசத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான உபுல் நுவான் குமார (வயது 36) என்பவரே இவ்வாறு மரணமடைந்துள்ளார்.

உயிரிழந்த நபரின் பணப்பையிலிருந்த சுமார் ஒரு இலட்சத்துக்கும் அதிகமான பணம் மீட்கப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பிரேத பரிசோதனைக்காக, புத்தளம் ஆதார வைத்தியசாலையின் பிரேத அறையில் சடலம் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

## மரணவீட்டில் பங்கேற்ற 26 பேருக்குக் கொரோனா

கொழும்பு, ஜூலை 23

பிபிலை நகர் வாகொல்ல தோட்டத்தில் இடம்பெற்ற மரண வீடொன்றில் கலந்துகொண்ட 26 பேருக்கு, கொரோனா வைரஸ் தொற்று உறுதிபடுத்தப்பட்டுள்ளது எனப் பிரதேசத்துக்குப் பொறுப்பான பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்துள்ளனர்.

மரணவீட்டில்கலந்துகொண்ட 95 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையிலேயே 26 பேருக்குத் தொற்று உறுதிபடுத்தப்பட்டுள்ளது. (இ)

## தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய மேலும் 189 பேர் கைது

கொழும்பு, ஜூலை 23

நாட்டில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய மேலும் 189 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

அதன்படி, கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் முதல் இதுவரையான காலப்பகுதினுள் 51 ஆயிரத்து 581 பேர்கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இந்த வார இறுதி விடுமுறையில், மக்கள் தனிமைப்படுத்தல் சட்டத்துக்கு உட்பட்ட வகையில் மிகவும் அவதானமாகச் செயற்பட வேண்டும் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கேட்டுக்கொண்டுள்ளார். (இ)

## மலையக சிறுமியின் மரணத்தின் மர்மம் கண்டறியப்பட வேண்டும்!

### கூட்டமைப்பு எம்.பி. சிறிதரன் வலியுறுத்து

"முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீனின் இல்லத்தில் பணிப் பெண்ணாக இருந்த ஹிஷாலினி யூட்குமார் என்னும் 16 வயதான மலையகச் சிறுமியின் மரணம் எம் எல்லோரது மனங்களையும் பாதித்துள்ளது.

அச்சிறுமி யின் மரணத்துக்குப் பின்னுள்ள மர்மங்கள் வெளிப்படுத்தப்பட்டு அவரது குடும்பத்திற்கு நீதியைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்பதே நான் உட்பட அனைத்துத் தரப்பினரதும் கோரிக்கையாகும்."

- இவ்வாறு வலியுறுத்தியுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

"ஊடகங்களிலும், சமூக வலை தளங்களிலும் பேசுபொருளாகியிருக்கின்ற ஹிஷாலினி என்ற ஒற்றைச் சிறுமியின் அவலத்தைத் தாண்டி, இன்னமும் எங்களால் பேசப்படாத எத்தனை எத்த னையோ சிறுமிகளுக்கு இத்தகைய துன்பியல்சம்பவங்கள் நாளாந் தம் நடந்த வண்ணமே இருக்கின் றன. மிஹிந்தலைப் பகுதியைச் சேர்ந்த 16 வயதுச் சிறுமியை பாலியல் நடவடிக் கைகளுக்காக இணை யவழியில் விற்பனை செய்த சம்ப வம் அண் மையில் எமது நாட்டில் நடந் திருக்கின்றது.

இவற்றையெல்லாம் தாண்டி இயல்பாகவோ, எளிதாகவோ கடந்துசெல்ல முடியாத அளவுக்கு ஹிஷாலினிக்கு நேர்ந்திருக்கும் அவலத்தின் பின்னணியில் யார் இருந்தாலும் அவர்கள் சட்டத்தின் முன்நிறுத்தப்படவேண்டும்.

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனின் வீட்டில் பணி புரிபவர்களை மையப்படுத்தி விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதை ஊடகங்கள் வாயிலாக அறியமுடிகின்றது. அதற்கு அப்பால் முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீனை அரசியலிலிருந்து முழுமையாக ஓரம்கட்டுவதற்கான முஸ்தீபுகள் தற்போதைய அரசால் முனைப்புடன் மேற்கொள்ளப்பட்டுவரும் காலச் சூழலில் சிறுமியின் மரணத்தின் பின்ன ணியில் வேறேதும் சதித் திட்டங்களுக்கோ, அரச கைக் கூலிகளுக்கோ தொடர்புள்ளதா என்பது குறித்தும் நேர்மையான விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என வலியுறுத்துகின்றேன்" - என்றுள்ளது. (இ)

## கொக்குவிலில் கடைக்கு தீ வைத்த அடாவடிக் குழு

யாழ்ப்பாணம், ஜூலை 23

யாழ்ப்பாணம், காங்கேசன் துறை வீதியில் கொக்குவில், குளப்பிட்டி சந்திக்கு அருகாமையில் உள்ள கடை ஒன்று அடாவடிக்குழுவால்தீவைத்து எரிக்கப்பட்ட சம்பவம் நிகழ்ந்துள்ளது.



இந்தச் சம்பவம் குறித்து தெரிய வருவதாவது,

கடை உரிமையாளரும் அவரது மனைவியும் மனைவியாரது தம்பியும் கடையிலிருந்து தமது கடையின் பின்புறத்தே உள்ள வீட்டுக்குக் கடையில் உள்ள பொருட்களைக் கொண்டு சென்றநேரம் கடை முன்பாக வந்த குழுவினர் பெற்றோல்போத்தலை எறிந்து தீமூட்டியதுடன், கடை உரிமையாளரின் மனைவியின் மீது வாளால் வீச முற்பட்டுள்ளனர்.

இருப்பினும் தெய்வாதீனமாக குறித்த பெண் எதுவித காயமுமின்றி தப்பித்துள்ளார். அலறல் சத்தத்தையடுத்து கடையின் பின்புறம் நின்றவர்கள் ஓடி வந்து தீயை அணைக்க முற்பட்டபோது சிலருக்குத் தீக்காயமும் ஏற்பட்டுள்ளது.

சம்பவ இடத்துக்கு உடனடியாக விரைந்த யாழ். பொலிஸ் தலைமையகப் பொறுப்பதிகாரி விசாரணைகளை மேற்கொண்டார்.

இந்தச் சம்பவத்தால் கொக்குவில் பகுதியில் பரபரப்பு நிலவியது. இதையடுத்து அப்பகுதியில் பெருமளவு பொலிஸாரும் படையினரும் குவிக்கப்பட்டனர். (இ - 03)

ஈழநாடு



# டோக்கியோ ஒலிம்பிக்கில் போட்டியில் கொரோனா ஆபத்து தவிர்க்க முடியாதது

## உலக சுகாதார அமைப்பு கடும் எச்சரிக்கை

டோக்கியோ, ஜுலை 23

டோக்கியோ ஒலிம்பிக் போட்டியில், கொரோனா வைரஸ் பாதிப்பை தவிர்க்க முடியாது என, உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ராஸ் அதனோம் எச்சரித்துள்ளார்.

உலக சுகாதார அமைப்பின் டெட்ராஸ் அதனோம் கூறிய தாவது:-

கொரோனா பாதிப்பு புள்ளி விபரத்தின் மூலம், ஒலிம்பிக் போட்டியில் வைரஸ் பாதிப்பை குறைத்து மதிப்பிட முடியாது. வைரஸ் பிரச்னையை முற்றிலும் ஒழிப்பதென்பது முடியாத காரியம். விளையாட்டு வீரர்களில் கொரோனாவால் பாதிக்கப்பட்டோரை விரைவாக அடையாளம் கண்டு, தனிமைப்



படுத்த வேண்டும். இதன்மூலம் நோய் பரவலை கட்டுப்படுத்த லாம்.

ஆனால், உலகில் வழங்கப் பட்ட தடுப்பூசியில், 75 சத வீதத்தை, 10 நாடுகள் மட்டுமே பங்கு போட்டுக் கொண்டுள்ளன. உலகின் பல்வேறு பகுதிகளில் தற்போது பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தி வரும் கொரோனாவின் டெல்டா மாறுபாட்டை விட அதிக பரவல் கொண்டதும், ஆபத்து நிறைந்ததுமான மற்றுமொரு மாறுபாட்டை மனிதகுலம் விரைவில் பார்க்கக்கூடும்.

உலகின் பல்வேறு பகுதிகளில் தற்போது பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தி வரும் கொரோனாவின் டெல்டா மாறுபாட்டை விட அதிக பரவல் கொண்டதும், ஆபத்து நிறைந்ததுமான மற்றுமொரு மாறுபாட்டை மனிதகுலம் விரைவில் பார்க்கக்கூடும்.

கொரோனாவுக்கு எதிராக தடுப்பூசியின் கண்டுபிடிப்பு மற்றும் உலகம் முழுவதும் அதன் பயன்பாடுகள் மட்டுமின்றி, பல்வேறு தடுப்பு நடவடிக்கைகள் இருந்தபோதிலும் உலகம் மற்றொரு கொரோனா அலையின் விளிம்பில் உள்ளது" என்றார்.



# முதல் முறையாக மெக்காவில் பாதுகாப்பு பணியில் பெண்கள்

ரியாத், ஜுலை 23

மெக்காவில் முதல் முறையாக பாதுகாப்புப் பணியில் இராணுவத்தைச் சேர்ந்த பெண்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

சவுதி அரேபியாவின் பட்டத்து இளவரசர் முகமது பின் சல்மான், அங்கு பல்வேறு சமூக மற்றும் பொருளாதார சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார். பழமைவாதம் மற்றும் அடைப்படைவாத கொள்கைகளை மாற்றி, நவீன சமுதாய கட்டமைப்புகளை வரும் 2030 ஆம் ஆண்டுக்குள் உருவாக்க வேண்டும் என அவர் கூறியுள்ளார்.

இதன் ஒரு பகுதியாக சவுதி அரேபியாவில் பெண்களுக்கு வாகனம் ஓட்டுவதற்கான தடையை நீக்கியது, பெண்கள் தங்கள் பாதுகாவலர்களின் அனுமதியின்றி தனியாக பயணம் செய்ய அனுமதி, குடும்ப விவகாரங்களில் அதிக உரிமை வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளை அவர் மேற்கொண்டுள்ளார்.

அந்த வகையில் கடந்த ஏப்ரல் மாதம் முதல், மெக்கா மற்றும் மதீனாவில் உள்ள புனித தளங்களுக்கான பாதுகாப்புப் பணியில்ஈராணுவத்தைச் சேர்ந்த பெண்கள் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர்.

தற்போது மெக்காவில், உலகெங்கிலும் இருந்து வரும் இஸ்லாமியர்கள் ஹஜ் புனித யாத்திரை மேற்கொள்ளும் இடத்தில், காக்கி உடையணிந்த பெண்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

# 1,000 ஆண்டுகளில் இல்லாத வகையில் சீனாவில் ஒரே நாளில் கொட்டிய மழை

பெய்ஜிங், ஜுலை 23,

மத்திய சீனாவின் ஹெனான் மாகாணத்தில் கடந்த சில நாட்களாகப் பெய்து வரும் கன மழையால் வீதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. இதனால் ஹெனான் மாகாணத்தின் தலைநகர் ஜென்சூ கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. 1,000 ஆண்டுகளில் இல்லாதள வுக்கு இங்கு கன மழை பெய்திருப்பதாகச் சொல்லப்படுகின்றது.

ஆண்டுக்கு சராசரியாக 60 சென்டி மீட்டர் மட்டுமே மழை பெய்யும் நிலையில், நேற்று ஒரு நாள் மட்டும் ஒரு மணி நேரத்தில் 20 சென்டி மீட்டர் மழை கொட்டித் தீர்த்தது. இதனால் ஜென்சூ நகரமே வெள்ளத்தில் மிதக்கிறது.

மஞ்சள் ஆறு மற்றும் ஹைஹே நதிகளின் துணை நதிகளின் நீர்மட்டம் அபாய அளவைத் தாண்டி ஓடுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. சாலைகளில் வெள்ளம் பெருக்கெடுத்த நிலையில், ஆறுகளாக மாறி விட்டன. அங்கு நிறுத்தப்பட்டிருந்த கார்கள் நீரில் அடித்துச் செல்லப்பட்டன.

வெள்ளத்தில் சிக்கி இதுவரை 25 பேர் பலியாகியுள்ளதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

மேலும் மாயமான 7 பேரைத் தேடும் பணிகள் தீவிரமடைந்துள்ளன.

# இந்தியாவில் கொரோனாவினால் பலியானவர்களின் தொகை என்ன?

## புதிய ஆய்வு தகவலால் அதிர்ச்சி

புதுடெல்லி, ஜுலை 23

இந்தியாவில் கொரோனா வைரஸ் பெருந்தொற்று, சுனாமி போல மோசமான விளைவுகளை ஏற்படுத்தி விட்டது. அமெரிக்கா, பிரேசிலைத் தொடர்ந்து உலக அளவில் கொரோனாவால் அதிகபட்ச இறப்புகளை சந்தித்த நாடாக இந்தியா (4 லட்சத்து 18 ஆயிரத்து 480) உள்ளது.

ஆனாலும் இந்த எண்ணிக்கை சரியானதுதானா என்ற கேள்வியை இப்போது எழுப்புகிற வகையில் ஓர் ஆய்வு அறிக்கை வெளியாகி உள்ளது. இந்த ஆய்வு அறிக்கையை வெளியிட்டிருப்பவர்கள் இந்தியாவின் முன்னாள் தலைமை பொருளாதார ஆலோசகர் அரவிந்த் சுப்பிரமணியன், அமெரிக்காவின் உலகளாவிய மேம்பாட்டுக்கான சிந்தனைக்குழுவின் ஜஸ்டின் சாண்ட்பூர், ஹார்வர்டு பல்கலைக்கழகத்தை சேர்ந்த அபிஷேக் ஆனந்த் ஆகியோர் தான் இணைந்து இதனை வெளியிட்டுள்ளனர்.

இதில் அவர்கள் கூறி இருக்கும் முக்கிய தகவல்கள் வருமாறு:-

"கொரோனா உயிரிழப்புகளை புள்ளிவிவர நம்பிக்கையுடன் மதிப்பிடுவது என்பது மழுப்பலான ஒன்றாகவே இருக்கும். ஆனால், எல்லா மதிப்பீடுகளுமே கொரோனாவால் இறந்தவர்களின் எண்ணிக்கை 4 லட்சம் என்ற அதிகாரபூர்வ எண்ணிக்கையை விட அதிகளவில் இருக்கக்கூடும் என்றே கூறுகின்றன.

உண்மையான இறப்புகள் என்பது லட்சக்கணக்கில் அல்ல, பல மில்லியன் கணக்கில் இருக்கக்கூடும். இது தேசப்பிரிவினை மற்றும் விடுதலைக்கு பிந்தைய மிக மோசமான மனித துயரத்தை ஏற்படுத்தி உள்ளது.

கொரோனாவால் ஜனவரி 2020 மற்றும் ஜுன் 2021 ஆகியவற்றுக்கு இடைப்பட்ட காலத்தில் அதிகப்படியான இறப்புகளாக 3.4 மில்லியன் முதல் 4.9 மில்லியன் வரையில் (34 லட்சம் முதல் 49 லட்சம் வரையில்) நேர்ந்திருக்கலாம் - என்று அவர்கள் தெரிவித்தனர்.



# ஸ்பெயின் நாட்டின் அந்தலுசியன் பாராளுமன்றத்தில் புகுந்தது எலி

மட்ரிட், ஜுலை 23,

ஸ்பெயின் நாட்டின் பாராளுமன்ற கூட்டம் நேற்று நடந்து கொண்டு இருந்தது. எம்.பி.க்கள் சுசானா டயஸை செனட்டராக நியமிக்க கோரும் ஒரு முக்கியமான பிரச்சினையில் வாக்களிக்க தயாராகி கொண்டு இருந்தனர்.

அப்போது எலி ஒன்று எம்.பிக்கள் காலில் ஏறி அங்கும் இங்கும் ஓடியது. இதனால் பெண் எம்.பிக்கள் கதறியபடி ஓடினர். சிலர் கத்தி கூச்சலிட்டவாறு வெளியே ஓடினர். இதை தொடர்ந்து பாராளுமன்ற கூட்டம் தற்காலிகமாக நிறுத்தி வைக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

பின்னர் எலி ஒருவாராக வெளியேற்றப்பட்டதும், பாராளுமன்ற நடவடிக்கைகள் இயல்பாகவே மீண்டும் தொடங்கின. எம்.பிக்கள் மீண்டும் கூடி, அந்தலுசியன் தன்னியக்க சமூகத்தின் செனட்டராக பெர்னாண்டோ லோபஸ் கிலுக்கு பதிலாக சுசானா டயஸை தேர்ந்து எடுத்தனர் .

பாராளுமன்றத்தில் எலி புகுந்து ஏற்படுத்திய களேபர வீடியோ சமூக வலைதளத்தில் வைரலாக பரவியது.

# நைஜீரியாவில் பயங்கரவாதிகளால் கடத்தப்பட்ட பெண்கள் விடுவிப்பு

அபுஜா, ஜுலை 23,

நைஜீரியாவில் பயங்கரவாதிகளால் கடத்தப்பட்ட 100 பெண்கள் மற்றும் சிறுவர்களை பயங்கரவாதிகள் விடுவித்து விட்டதாக ஜம்பாரா மாகாண அரசு தற்போது தெரிவித்துள்ளது.

ஆபிரிக்க நாடான நைஜீரியாவில் போகோ ஹரம் உள்பட பல்வேறு பயங்கரவாத அமைப் புகள் கடும் ஆதிக்கம் செலுத்தி வருகின்றன.



இந்த பயங்கரவாதிகள் பொது மக்களை கடத்தி அவர்களை பிணைக்கைதி களாக வைத்து கொண்டு அரசை மிரட்டி தங்களுக்கு தேவையான காரியத்தை சாதித்து கொள்வதை வழக்கமாக கொண்டுள்ளனர்.

அந்த வகையில் நைஜீரியாவின் வட மேற்கு பகுதியில் உள்ள ஜம்பாரா மாகாணத்தில் கடந்த மாதம் 8ஆம் திகதி அங்குள்ள கிராமங்களுக்குள் புகுந்து தாக்குதல் நடத்திய பயங்கரவாதிகள் 100 பெண்கள் மற்றும் சிறுவர்கள் பலரை துப்பாக்கி முனையில் கடத்தி சென்றனர்.

இதையடுத்து பயங்கரவாதிக ளால் கடத்தப் பட்ட பெண்கள் மற்றும் சிறுவர்களை பத்திரமாக மீட்க ஜம்பாரா மாகாண அரசு அனைத்து முயற்சி களையும் மேற் கொண்டுவந்தது.

இந்த நிலையில் கடத்தப்பட்ட ஒரு மாதத் துக்கு பிறகு 100 பெண்கள் மற்றும் சிறுவர்களை பயங்கரவாதிகள் விடுவித்துவிட்டதாக ஜம்பாரா மாகாண அரசு தற்போது தெரிவித்துள்ளது.

# எப்படி வெற்றி பெறுவதென்பதே தெரியாத அணி!



ஒரு போட்டியில் வெற்றி பெறுவது எப்படி என்பதை பல ஆண்டுகளாக இலங்கை அணி மறந்து விட்டது. தற்போது கடினமான காலகட்டத்தில் இலங்கை அணி இருக்கிறது என்று முன்னாள் வீரர் முத்தையா முரளிதரன் கடுமையாகச் சாடியுள்ளார்.

கொழும்பில் நேற்று முன் தினம் நடந்த இந்திய அணிக்கு எதிரான 2ஆவது ஒருநாள் ஆட்டத்தில் 3 விக்கெட் வித்தியாசத்தில் இலங்கை அணி தோல்வியடைந்தது. 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில 2-0 என்ற கணக்கில் வென்று ஒருநாள் தொடரை இந்திய அணி கைப்பற்றியுள்ளது. ஒரு கட்டத்தில் இந்திய அணி 7 விக்கெட் இழப்புக்கு 193 ரன்கள் சேர்த்து தோல்வியின் பிடியில் இருந்தது, ஆட்டமும் இலங்கை பக்கம் சென்று விட்டது ஆனால், இலங்கை அணியின் கப்டன் தசுன் சானக பந்துவீச்சாளர் களைச் சரியாகப் பயன்படுத்தாதே தோல்விக்குக் காரணமாகும்.

லெக்ஸ்பின்னர் ஹசரங்கவின் பந்துவீச்சுக்கு இந்திய வீரர்கள் திணறினர், 3விக்கெட்டுகளை இழந்தனர். ஹசரங்கவுக்கு ஓவரை விரைவாக முடித்துவிட்டு கடைசி நேரத்தில் ஓட்டங்களைக் கட்டுப்படுத்த பந்துவீச்சாளர் இல்லாமல் அணித்தலைவர் சானக தடுமாறினார்.

ஹசரங்கவுக்கு 3 ஓவர்களை நிறுத்தி வைத்திருந்தால் கடைசி நேரத்தில் தீபக் சஹாருக்கும், புவனேஷ்வருக்கும் கடும் நெருக்கடி அளித்திருக்கலாம். 275 ரன்கள் அடித்தும் அதை டிபெண்ட் செய்ய முடியாமல் இலங்கை அணி வெற்றியைக் கோட்டைவிட்டது.

வெற்றியை கோட்டைவிட்டது குறித்து ஏற்கெனவே கப்டன் சானகவுக்கும், பயிற்சியாளர் ஆர்தருக்கும் இடையே களத்தில் வாக்குவாதம் நடந்தது.

இந்த சூழலில் முன்னாள் வீரர் முத்தையா முரளிதரனும் இலங்கை அணியை விமர்சித்துள்ளார்.

அவர் அளித்த பேட்டியில் கூறியதாவது:

இலங்கை அணிக்கு எவ்வாறு வெற்றி பெறுவது, வெற்றி பெறும் வழிகள், பல ஆண்டுகளாகவே மறந்துவிட்டது என நான் ஏற்கெனவே கூறியுள்ளேன். இலங்கை அணிக்கு இனிவரும் காலம் கடினமாக இருக்கும், ஏனென்றால், அவர்களுக்கு ஒரு போட்டியைக் கூட வெல்வது எவ்வாறு என்பது தெரிந்திருக்கவில்லை.

முன்பே நான் கூறியதுபோல், இலங்கை அணி முதல் 15 ஓவர்களில் இந்திய அணியின் 3 விக்கெட்டுகளை வீழ்த்தினால், இந்திய அணி கடுமையாகத் திணறும். இந்த ஆட்டத்திலும் ரன் சேர்க்கத் திணறியது. ஆனால், தீபக் சஹர், புவனேஷ்வர் இருவரும் சேர்ந்து மிகப் பெரிய பணி செய்து வெற்றியை கொடுத்துள்ளார்கள்.

இலங்கை அணியினரும் சில தவறுகளைச் செய்தார்கள். லெக் ஸ்பின்னர் ஹசரங்கவை முழுமையாக பந்துவீச வைப்பதற்கு முன் அவருக்கு சில ஓவர்களை நிறுத்தியிருக்கவேண்டும். அவ்வாறு இருந்தால்,கடைசி நேரத்தில் சில விக்கெட்டுகளை ஹசரங்க வீழ்த்தியிருப்பார்.

புவனேஷ்வர் அல்லது சஹர் இருவரில் ஒரு விக்கெட்டை வீழ்த்தியிருந்தாலும், அடுத்துவரும் டெய்ல் எண்டர் வீரர்களால் ஓவருக்கு 8 முதல் 9 ஓட்டங்களை அடிக்க முடியாது. ஓட்டம் அடிக்கமுயற்சி செய்து தவறான ஷொட்களை ஆடுவார்கள், அனுபவமற்ற வீரர்களை வீழ்த்திவிடலாம்.

பயிற்சியாளர் ஆர்தர் அவசரப்படாமல் கோபப்படாமல் புதிய அணித்தலைவர் சானகவுடன் பேசியிருக்க வேண்டும். அணி தோல்வி அடையும்போது பயிற்சியாளர் அமைதி காக்கவேண்டும். பயிற்சியாளரே தனது அதிருப்தியை வெளிப்படுத்தாமல் அமைதி காத்து, கப்டனுக்கு எளிமையாக புரிய வைக்கவேண்டும்.

சிறந்த பந்துவீச்சாளரை அழைத்துப் பேசி அவரை விக்கெட் வீழ்த்த வைக்கவேண்டும், அதற்குப் பதிலாக கடைசிவரை ஆட்டத்தை இழுத்துச் செல்வது ஒரு போதும் பயனளிக்காது. 7 விக்கெட்டுகளை வீழ்த்திவிட்டார்கள், ஒருவிக்கெட்டை வீழ்த்தினால் ஆட்டமும் முடிவுக்குவரும். ஆனால், இலங்கை வீரர்களுக்கு வெற்றி பெறுவதற்கான வழி தெரியவில்லை. அவர்கள் மறந்துவிட்டார்கள். வெற்றிக்கான வழியில் வர இலங்கை அணிக்கு இது கடினமான காலம் - இவ்வாறு முரளிதரன் தெரிவித்தார்.




# ரோக்கியோ ஒலிம்பிக் இன்று கோலாகல ஆரம்பம்

## 950 பேருக்கு அனுமதி

இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகும் ரோக்கியோ ஒலிம்பிக் போட்டியின் தொடக்க விழாவினை அதிகாரிகள் மற்றும் பத்திரிகையாளர்கள் உட்பட சுமார் 950 பேர் பிரதான அரங்கத்தில் பார்க்கவுள்ளனர்.

அந்தக் குழுவுக்கு மேலதிகமாக விளையாட்டு வீரர்கள் மற்றும் விளையாட்டு உறுப்பினர்களும் பங்கேற்பார்கள்.

அதில் இருந்து போட்டிகளை நேரடியாக பார்வையிடுவதற்கு பார்வையாளர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாக 2020 ரோக்கியோ ஒலிம்பிக்கின் முக்கிய செயல்பாட்டு மையத்தின் தலைவர் ஹிடேமாசா நகாமுரா கூறினார்.

இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ள டோக்கியோ ஒலிம்பிக் தொடக்க விழாவுக்கு முன்னதாக விளையாட்டுகளுடன் தொடர்புடைய 85 க்கும் மேற்பட்டவர்கள் கொவிட்-19 தொற்றுக்கு சாதகமாக சோதனை செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பங்களாதேஷ் செல்லும் அவுஸ்ரேலியா அணி!

அவுஸ்ரேலியக் கிரிக்கெட் அணி, பங்களாதேஷுக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டு ஐந்து போட்டிகள் கொண்ட ரி-20 தொடரில் விளையாடவுள்ளது.

பங்களாதேஷ் சுற்றுப்பயணத்தை பங்களாதேஷ் கிரிக்கெட் சபையின் கிரிக்கெட் செயற்பாட்டுத் தலைவர் அக்ரம் கான் உறுதிப்படுத்தியுள்ளார்.

தற்செயலாக, கொவிட்-19 தொற்று பங்களாதேஷில் அதிகரித்து வருகின்றபோதிலும், கிரிக்கெட் அவுஸ்ரேலியா உயிர் பாதுகாப்பு ஏற்பாடுகளில் திருப்தி அடைவதாகக் கூறப்படுகிறது. இதனால், ஒகஸ்ட் 2ஆம் திகதி இத்தொடர் ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

அவுஸ்ரேலியா மற்றும் பங்களாதேஷ் இருவரும் முறையே மேற்கிந்திய தீவுகள் மற்றும் சிம்பாப்வேயில் இருந்து டாக்காவுக்கு ஜூலை 29ஆம் திகதி வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஐந்து ரி-20 போட்டிகளும் முறையே ஒகஸ்ட் 2ஆம், 3ஆம், 5ஆம், 7ஆம் மற்றும் 8ஆம் ஆகிய திகதிகளில் நடைபெற உள்ளது.

# ரோக்கியோ 2020 ஒலிம்பிக் நாமலுக்கு ஜப்பான் வாழ்த்து

ரோக்கியோவில் ஆரம்பமாகவுள்ள 2020 ஒலிம்பிக் போட்டிகளின் அங்குரார்ப்பண வைபவத்தில் பங்கேற்பதற்காக இலங்கையின் இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சரும், டிஜிற்றல் தொழில்நுட்பம் மற்றும் நிறுவன அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமான நாமல் ராஜபக்ஷ அங்கு பயணமாகியுள்ளார்.



அவருக்கு, கொழும்பிலுள்ள ஜப்பானிய தூதுவர் சுகியாமா அகிரா, தூதுக்குழுவின் பிரதித் தலைவரும் அமைச்சருமான கிட்டமுரா டொஷிஹிரோ ஆகியோர் வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.

நேற்று முன் தினம் ரோக்கியோவுக்கு புறப்படும் முன்னர் அமைச்சரை சந்தித்து தமது நல்வாழ்த்துகளை தெரிவித்தனர்.

இந்தச் சந்திப்பின் போது, ரோக்கியோ ஒலிம்பிக் போட்டிகள் 2020 அங்குரார்ப்பண நிகழ்வில் பங்கேற்பதற்காக ஜப்பானுக்கு விஜயம் செய்யும் அமைச்சர் நாமல் ராஜபக்ஷவுக்கு, கிட்டமுரா தமது வாழ்த்துகளை தெரிவித்தார். அத்துடன், இந்தப் போட்டிகளில் பங்கேற்கும் இலங்கை அணியினருக்கும் வாழ்த்துகளைத் தெரிவித்திருந்தார்.

ரோக்கியோ 2020 ஒலிம்பிக் போட்டிகள் 2021 இன்றுமுதல் முதல் ஒகஸ்ட் 8 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளன.

கொவிட்-19 தொற்றிலிருந்து விடுபடுவதற்கான சர்வதேச கைகோர்ப்பின் அடையாளமாக இந்தப் போட்டிகள் அமைந்திருப்பதாக ஜப்பான் கருதுகின்றது. இந்தப் போட்டிகளை மிகவும் பாதுகாப்பானதான முறையில் முன்னெடுப்பதற்கு இயலுமான சகல கடும் முற்காப்பு நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது.

# இந்தியாவுடன் டெஸ்ட் போட்டி; இங்கிலாந்து அணி அறிவிப்பு!

இந்தியக் கிரிக்கெட் அணிக்கெதிரான முதலிரண்டு டெஸ்ட் போட்டிகளில் விளையாடும், எதிர்பார்ப்பு மிக்க இங்கிலாந்து அணி விவரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

17பேர் கொண்ட இந்த அணியில், 24 வயது துடுப்பாட்ட வீரரான ஹசீப் ஹமீட் நீண்ட நாட்களுக்குப் பிறகு அணிக்குள் உள்வாங்கப்பட்டுள்ளார்.

ஹசீப் ஹமீட் இறுதியாக கடந்த 2016ஆம் ஆண்டு இந்தியா அணிக்கெதிரான டெஸ்ட் போட்டியில் விளையாடியிருந்தார். அவர் இதுவரை மூன்று டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 219 ஓட்டங்களை குவித்துள்ளார்.

அடுத்ததாக தனது அறிமுக டெஸ்ட் போட்டியின் பின்னர் சர்ச்சையில் சிக்கிய வேகப்பந்து வீச்சாளரான ஒல்லி றொபின்சன் மீண்டும் அணியில் இணைந்துள்ளார். அவர் தனது நியூஸிலாந்து அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் 7 விக்கெட்டுகளை வீழ்த்தி அசத்தினார்.




ஜோ ரூட் தலைமையிலான அணியில், ஜேம்ஸ் எண்டர்சன், ஜோனி பேயர்ஸ்டொவ், டொம் பெஸ், ஸ்டுவர்ட் புரோட், ரொறி பர்ன்ஸ், ஜோஸ் பட்லர், ஸெக் கிரௌவ்லி, சேம் கர்ரன், ஹசீப் ஹமீட், டேன் லோவ்ரன்ஸ், ஜெக் லீச், ஒல்லி போப், ஒல்லி றொபின்சன், டோம் சிப்ளி, பென் ஸ்டோக்ஸ், மார்க் வுட் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இங்கிலாந்து மற்றும் இந்தியா அணிகளுக்கிடையில் ஐந்து போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் நடைபெறவுள்ளது. இதன் முதல் போட்டி எதிர்வரும் ஒகஸ்ட் 4ஆம் திகதி நொட்டிங்ஹாம்-ட்ரென்ட் பிரிட்ஜ் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

# பயங்கரவாதத் தடைச் சட்டம் முற்றாக நீக்கப்பட வேண்டும்

## ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரை கண்டனத்துக்குரியது என்கின்றது ரெலோ



**யாழ்ப்பாணம், ஜூலை 23**

**“பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கத் தேவையில்லை் சில சரத் துக்களை மாத்திரம் மாற்றம் செய்வதன் மூலம் சட்டத்தை திருத்தி தொடர்ந்தும் நடை முறைப்படுத்தலாம் என்கின்ற ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரையை நாம் நிராகரிக்கின்றோம். இந்தச் சட்டம் முற்றாக நீக்கப்பட வேண்டும் என்பதே எங்களுடைய நிலைப்பாடு.”**

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ரெலோ வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: -

“சட்டவல்லுநர்கள், ஜனநாயகவாதிகள், மனித உரிமை செயல்பாட்டாளர்கள், அரசியல் கட்சிகள் ஏன் சர்வதேச நாடுகள் உட்பட பலதரப்புடக்கள் இந்தச் சட்டத்தால் ஏற்பட்ட கடும் மக்கள் விரோதப் போக்கைக் கண்டித்து இதை நீக்குமாறு வலியுறுத்தி அரசுக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றார்கள்.

ஏற்கனவே வீழ்ந்து செல்லும் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவோம் என புதிய நிதி அமைச்சர் நாட்டுக்கு வாக்குறுதி வழங்கியுள்ளார்.

இந்தச் சட்டத்தை நீக்காது விட்டால் ஐரோப்பிய ஒன்றிய வரிச்சலுகை நீக்கப்பட மாட்டாது. எமது ஏற்றுமதியும் அந்நிய செலாவணியும் பெரும் பாதிப்புக்கு உள்ளாகும். அப்ப டியான அபாய நிலைக்கு நாட்டை இட்டுச் செல்லும் பரிந்துரையை ஜனாதிபதி ஆணைக்குழு வழங்குவது எதற்காக?

ஜனாதிபதியால் ஏற்படுத்தப்பட்ட ஆணைக்குழு பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கத் தேவையில்லை என்று ஜனாதிபதிக்கு பரிந்துரை வழங்குவது வேலிக் கட்டைக்கு ஓணான் சாட்சி யாக அமைவது போல் இருக்கின்றது. இது எதிர்பார்க்கப்பட்ட விடயம்தான்.

இந்தப் பயங்கரவாத தடைச் சட்டத்தால் எமது தமிழினம் சொல்லொணாத கஷ்டங்களை அனுபவித்து வந்திருக்கின்றது. இன்றும் பல தசாப்தங்களாக விசாரணையோ, வழக்குகளோ, பிணையோ இன்றி பலர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். பலம் மிக்க இளைய சமுதாயம் இந்த நாட்டை விட்டு குடி பெயர்வதற்கும் இனக் குடிப்பரம்பலில் சிதைவை ஏற்படுத்துவதற்கும் இந்த பயங்கரவாத தடைச் சட்டம் முக்கிய காரணமாக அமைந்திருக்கின்றது.

சட்டவிரோதமான கைதுகள், காலவரையறை அற்ற தடுப்பு, பிணை வழங்காமை, குற்றம் சாட்டப்பட்டவர்களை விடுவிக்க எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாத சூழ்நிலை என்று அடிப்படை மனித உரிமைகளை மீறுவதாகவே அமைந்திருக்கின்றது. நியாயமான எமது போராட்டத்தை பயங்கரவாதமாகச் சித்தரித்து எமது இளம் சமுதாயத்தை வகை தொகையின்றி கைது செய்ததோடு சித்திரவதைக்கும் உள்ளாக்குவதற்கே இந்த சட்டம் பயன்படுத்தப்பட்டது. மாறாக எம்முடைய போராட்டத்தை தடுக்கவோ நிறுத்தவோ முடியவில்லை என்பது மறுக்க முடியாத உண்மை.

இன்று தமது தோல்விகளை மறைப்பதற்கும் தமக்கு எதிராக ஜனநாயகப் போராட்டத்தை நடத்த முற்படுபவர்களை கைது செய்வதற்கும் அரசியல் பழி வாங்க கல்களை அரங்கேற்றுவதற்குமே இந்தச் சட்டம் பயன்பட்டு வருவதை அனைவரும் அறிவார்கள்.

ஜனநாயக விழுமியங்களை மதிக்கப்படாத போற்றப்படாத இந்த அரசில், இந்தச் சட்டத்தில் சிறிய மாற்றங்களின் மூலம் ஜனநாயகத்தை பேணிவிடலாம் என்று ஜனாதிபதி ஆணைக்குழு சொல்வது மிகவும் வேடிக்கையாக இருக்கின்றது.

அப்பாவி மக்களைப் படுகொலை செய்து நீதிமன்றத்தால் தண்டனை வழங்கப்பட்ட குற்றவாளிகள் விடுவிக்கப்படுகின்றார்கள். அதேவேளை தம்முடைய இனத்திற்காகவும் மக்களுக்காகவும் நியாயமாக குரல் கொடுப்பவர்கள் கைது செய்யப்படுகிறார்கள். அதற்கு வழிவகுக்கும் அரசுக்குப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்துக்கு பரிந்துரைக்கும் மாற்றங்கள் எந்த விதத்தில் மக்களுக்கு நியாயத்தைப் பெற்றுத்தரும் ?

இதே அரசில் பதவி வகித்த காலங்களில் பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு ஆதரவாகச் செயற்பட்டவர்கள் கடந்த காலங்களில் அதே சட்டத்தின் கீழ் ஆதாரங்கள் இன்றி கைது செய்யப்பட்டு வழக்கு விசாரணை இன்றி தடுத்து வைக்கப்பட்டதை அல்லது தடுத்து வைக்கப்பட்டு வருவதை இந்த நாடு நன்கு அறியும்.

தமிழ் மக்களுக்கு மட்டுமல்லாமல் முழு நாட்டிலும் அராஜகத்தைத்தையும் சர்வாதிகாரத்தையும் நிலைநிறுத்த பயன்படும் இந்தச் சட்டத்தில், எந்த மாற்றங்களும் இதன் அடிப்படை நோக்கத்தை சீர் செய்து விடப்போவதில்லை. ஆகவே, முற்றாக இந்தச் சட்டம் நீக்கப்பட வேண்டும் என்பதே எங்களுடைய நிலைப்பாடு.

அனைத்துத் தரப்பினரும் பயங்கரவாதத் தடுப்பு சட்டத்தை ஒழிப்பதற்கு ஒருமித்து செயலாற்ற கோருகின்றோம். அதிகாரங்களுக்கும் அற்ப சலுகைகளுக்காகவும் இந்த சட்டத்திற்கு நொடர்ந்தும் ஆதரவு வழங்குபவர்கள் அறிந்தோ அறியாமலோ உங்களுக்கும் உங்கள் எதிர்கால சந்ததிக்கும் சிதை மூட்டுகிறீர்கள் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்” - என்றுள்ளது. (இ - 03)


## மரண அறிவித்தல்

**உதிர்வு**
**11 - 03 - 1950**



**உதிர்வு**
**22 - 07 - 2021**

### திரு.சவிரிமுத்து யேம்ஸ்தாஸ்

(இளைப்பாறிய நாரந்தனை கிராமசபை ஊழியர்)

ஊர்காவற்துறை நாரந்தனையை பிறப்பிடமாகவும் மன்னார் அடம்பனை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.சவிரிமுத்து யேம்ஸ்தாஸ் அவர்கள் 22.07.2021 வியாழனன்று காலமானார் என்பதை ஆழ்ந்த கவலையுடன் அறியத் தருகின்றோம்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சவிரிமுத்து – சவிராசி (துங்கம்மா) தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான செபஸ்ரியாம்பிள்ளை – சூசையானா (செல்லம்மா) தம்பதிகளின் அன்பு மருமகனும் கிறிஸ்பியன் லில்லியின் அன்புக் கணவரும் சுதர்சன், சோபிகா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் டிலீசியஸ் நிஷாந்தன் (பிரான்ஸ்), டயந்தினி ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான மரியதாசம்மா பீற்றர் திசநாயகம், யேசுதாசன், சேவியதாஸ்,சூசைதாசன் மற்றும் திருமதி அன்ரனிதாசம்மா பெனடிக்ற் ஆகியோரின் அன்புச் சகோதரரும் திருமதி ஜெனோபாறூபி தனபாலசிங்கம்,திருமதி மெற்றலின் நித்தியானந்தராசா, சில்வெஸ்ரர் ரெத்தினசிங்கம், அந்தோனி அமரசிங்கம், திருமதி மேரி கமலாதேவி டேமியன் பாலசிங்கம், திருமதி பற்றிமா மரியதாஸ் சபா ரெத்தினம், கிறகோரி பாலசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 23.07.2021 வெள்ளியன்று பிற்பகல் 3 மணிக்கு அவரின் இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு அடம்பன் புனித பிலிப்பு நேரியார் தேவாலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு அதனைத்தொடர்ந்து அடம்பன்சேமக்காலையில்பூதவுடல்நல்லடக்கம்செய்யப்படும். இவ் அறிவித்தலை உறவினர், நண்பர்களுக்கு அறியத்தரு கின்றோம்.

**தொடர்புகளுக்கு:**
சுதர்சன் : 0779363253 , 076 309 7303 - இலங்கை
சோபிகா : 0033625052560 - பிரான்ஸ்

தகவல்
**குடும்பத்தினர்.**


# மக்கள் மத்தியில் இருந்த செல்வாக்கை முழுமையாக இழந்திருக்கின்றது அரசு

## சீனாவின் ஆதிக்கம் இலங்கையில் இருப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என்கிறது கூட்டமைப்பு

மட்டக்களப்பு, ஜூலை 23

“இந்த அரசாங்கம் நாங்கள் எதிர்பார்த்ததைவிட அவசரமாக மக்கள் மத்தியில் இருந்த செல்வாக்கை முழுமையாக இழந்திருக்கின்றது.”

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு நீதிமன்றத்துக்கு நேற்று அவர் வருகை தந்தபோது ஊடகவியலாளர்களின் கேள்விக்கு மேற்கண்டவாறு பதிலளித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“மாசி மாதத்திலிருந்து போராட்டங்களை ஆரம்பித்து வைத்தவர்கள் நாங்கள்தான். எந்தப் போராட்டம் நடந்தாலும் அதற்காக முழுமையான ஆதரவு இருக்கின்றது.

நாங்கள் எந்த நாட்டுக்குச் சார்பானவர்களும் அல்லர் எதிரானவர்களும் அல்லர். இலங்கைவாழ் தமிழ் மக்களைப் பொறுத்தவரையிலே எங்களுடைய அரசியல் பிரச்னை சம்பந்தமாக இந்தியா - இலங்கை தமிழ் மக்கள் சார்பில் 1989 ஆம் ஆண்டு ஒரு சர்வதேச உடன்படிக்கையைக் கைச்சாத்திட்டுள்ளது.

அது முழுமையாக அமுல்படுத்த வேண்டும் என்பது எங்களது கோரிக்கை. இதன் காரணமாக நாங்கள் இந்தியாவுடன் நெருங்கிச் செயல்படுகின்றோம்.

இந்திய அரசும் தொடர்ச்சியாக அதில் உள்ள விடயங்கள் எல்லாமே நிறைவேற்றப்பட வேண்டும் என்று தங்களுடைய கருத்தை மிகவும் ஆணித்தரமாகச் சொல்லி வருகின்றன.

இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையில் பகை இருப்பதென்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம். இந்தியாவினுடைய கரை எல்லையும் இலங்கையினுடைய கரை எல்லையும் வெறுமனே 30 கிலோமீற்றர்தான் உள்ளது. இந்தியா தனது பாதுகாப்பு தொடர்பாக அவர்கள் முன்னெடுக்கும் விடயங்களை நாங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

மனித உரிமைகளைப் பேணுகின்ற நாடுகள் இலங்கைக்குள் வந்து நட்புறவை ஏற்படுத்துவதை வரவேற்கக் கூடிய ஒரு விடயமாகப் பார்க்கலாம். ஆனால், சீனாவைப் பொறுத்தவரையில் ஜனநாயகம் இருப்பது என்பது எங்கள் எவருக்கும் தெரியாத ஒரு விடயம்.

ஒரு கட்சி ஆட்சிதான் அங்கு இருக்கின்றது. மாற்றுக் கருத்துக்கு இடம் அளிப்பதை அங்கு காணக்கூடியதாக இல்லை. மனித உரிமை என்றால் என்ன என்று கேட்பவர்களுக்கு எங்களுடைய நிலைப்பாடு பாதிக்கப்பட்டவர் என்ற ரீதியிலும், மனித உரிமை விடயங்களுக்கு அதிகமாக முகம் கொடுக்கப்படுகின்ற சமூகம் என்ற வகையிலும், ஜனநாயகத்தை புரிந்துகொண்டவர்கள் என்ற முறையில் சீனாவின் ஆதிக்கம் இலங்கையில் இருப்பதை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது.

ஊடகங்களையும் ஊடகவியலாளர்களையும் அச்சுறுத்துவது மிக மோசமான விடயம். நாங்கள் தொடர்ந்தும் இந்த விடயத்தை வலியுறுத்தி வருகின்றோம். இது தொடர்பாக கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம். மக்களுக்கு செய்தி சென்றடைவது அதிலும் உண்மை செய்திகள் சென்றடைவது என்பது ஜனநாயகத்தில் மிகவும் முக்கியமானது.- என்றார். (இ)

## இணையவழி...

யில் ஆசிரியர் தொழிற்சங்கங்களினால் ஆர்பாட்டப் பேரணி முன்னெடுக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டங்கள் மற்றும் பொது பேரணிகளுக்கு எதிராக சுகாதாரப் பரிந்துரைகள் வழங்கப்பட்டதை அடுத்து அவர்கள் ஜனாதிபதி செயலகத்துக்கு சென்றனர்.

பின்னர் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் மூவர் கலந்துரையாடலுக்காக ஜனாதிபதி செயலகத்தில் நுழைய அனுமதிக்கப்பட்டனர். கலந்துரையாடலில் பங்கேற்ற இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் பின்னர் தனது கருத்துக்களை ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

“இணையவழிக் கற்பித்தலைத் தவிர்ப்பதற்கான 11ஆவது நாளை இன்று(நேற்று) பதிவு செய்துள்ளோம். ஆசிரியர்களுக்கான சம்பள முரண்பாடுகள் குறித்த தற்போதைய பிரச்சினையை தீர்க்க கல்வி அமைச்சரால் அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தில் ஒரு திட்டம் சமர்ப்பிக்கப்படும் என்று நாங்கள் நம்ப முடியாது.

இதே அமைச்சரவை முன்மொழிவு 2020 ஜனவரியில் செய்யப்பட்டது, ஆனால் மேலும் முன்னேற்றம் இல்லை. எனவே, இந்த அமைச்சரவைப் பத்திரத்தில் நம்பகமான உத்தரவாதம் இல்லை.

நாங்கள் செவ்வாய்க்கிழமை (ஜூலை 20) கல்வி அமைச்சருடன் கலந்துரையாடினோம். ஆனால் அது ஒரு முட்டுக்கட்டைக்குள் முடிந்தது.

நாங்கள் சுகாதார வழிகாட்டுதல்களை கண்டிப்பாக கடைப்பிடிப்போம். சமூக இடைவெளியைப் பராமரிக்கிறோம் மற்றும் நாடுமுழுவதிலுமிருந்து கணிசமான எண்ணிக்கையிலான ஆசிரியர்களைக் கொண்டுவருவோம் என்று நம்புகிறோம்” என்று ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

ஆசிரியர் சங்கங்களால் தொடங்கப்பட்ட தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக, தனிமைப்படுத்தப்பட்ட விதிமுறைகளில் தொழிற்சங்கத் தலைவர்கள் கைது செய்யப்பட்டமை மற்றும் சம்பள முரண்பாடுகள் உள்ளிட்ட பல கோரிக்கைகளின் காரணமாக நாடு முழுவதும் உள்ள மாணவர்களின் இணையவழிக் கல்வி 10 நாள்களுக்கு மேலாக பாதிக்கப்பட்டுள்ளது.

## கொக்குவில்...

யாழ்ப்பாண பொலிஸார் தெரிவித்தனர்.

கொக்குவில் குளப்பிட்டி சந்திப் பகுதியில் நேற்று முன் தினம் இரவு இனந்தெரியாத நபர்களினால் புடைவைக் கடை ஒன்றுக்கு பெற்றோல் குண்டு தாக்குதல் மூலம் தீ மூட்டப்பட்டது.

இந்த சம்பவம் இரவு 8.45 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.

ஒரு மோட்டார் சைக்கிளில் வந்த மூவர் வாள்கள் மற்றும் பெற்றோல் குண்டு சகிதம் கடைக்குள் புகுந்து இந்த நாசகாரச் செயலைச் செய்துள்ளனர்.

இதன்போது கடையில் இருந்த புடைவைகள் மற்றும் நேற்று முன் தினம் கொழும்பில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட புடைவைகள் உட்பட பல லட்சம் ரூபா சொத்து தீயில் எரிந்து நாசமாகியுள்ளது.

தொழில் போட்டி காரணமாக இந்தச் சம்பவம் கைக்கூலிகள் மூலம் செய்யப்பட்டிருக்கலாம் என யாழ்ப்பாண பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த கடைக்கும் எதிரில் இன்னொரு புடைவைக்கடை உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

தீ மூட்டப்பட்ட கடை உரிமையாளர் குறைந்த விலைக்கு பொருட்களை இறக்குமதி செய்து குறைந்த விலைக்கு விற்பனை செய்வது தொடர்பில் எதிர்க் கடை வியாபாரியுடன் மனஸ்தாபம் ஒன்று ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர்களை கைது செய்து மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாணம் குற்றத்தடுப்பு பொலிஸார் மேற்கொண்ட நிலையில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# டயானாவின் திண்ணை வீட்டுக்கு ஓடியவர்களே சஜித் அணியினர்!

## பாலித தேவரப்பெரும சாடல்

கொழும்பு, ஜூலை 23

“சஜித் அணியினருக்கு என ஒரு தலைமையகம் இல்லை. டயானா எம்.பியின் திண்ணை வீட்டை நம்பி ஓடியவர்களே சஜித் அணியினர். தற்போது டயானாவும் தனது திண்ணை வீட்டிலிருந்து சஜித் தரப்பினரை வெளியேற்றியுள்ளார்.”

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் எம்.பி பாலித தேவரப்பெரும தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“களுத்துறை மாவட்டம் அகலவத்தைப் பிரிவில் மூன்று பிரதேச சபைகள் காணப்படுகின்றன. அகலவத்தை, பாலிந்த நுவர, வலலாவை ஆகியவையே அந்தப் பிரதேச சபைகள்.

கடந்த 14ஆம் திகதி அகலவத்தை பிரதேச சபையில் சகல உறுப்பினர்களையும் மீண்டும் எமது கட்சியில் பதிவு செய்தோம். அதேபோன்று இன்றைய தினம் வலலாவை பிரதேச சபையில் உறுப்பினர்களைக் கட்சியில் பதிவு செய்வதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளோம்.

ஸ்ரீ கொத்தவிலுள்ள பெரிய வீட்டுக்கு அழைத்து வந்து கட்சியில் மீண்டும் இணைத்துக்கொண்டோம்.

ஏற்கனவே எமது கட்சியில் அங்கத்துவம் வகித்த உறுப்பினர்கள் பெரிய வீட்டுக்குச் செல்லாது திண்ணை வீட்டுக்கே சென்றிருந்தனர். சஜித் அணியினரின் தலைமையகமே திண்ணை வீடு. சஜித் அணியினரை நான் எனது மொழியில் துரோகிகள் என்றே அழைப்பேன்.

அவர்கள் கட்சியிலிருந்து பிரிந்து சென்றதற்கு அவர்களுக்கு என்று தலைமையகம் ஒன்று இருக்கவில்லை. அவர்கள் டயானா என்ற எம்.பியின் திண்ணை வீட்டுக்கே சென்றிருந்தனர். இந்நிலையில், டயானா தனது திண்ணை வீட்டிலிருந்து அவர்களை வெளியேற்றிவிட்டார்.

இதுவரை சஜித் எம்.பிக்கு டயானாவை எம்.பி. பதவியிலிருந்து நீக்கிக்கொள்ள முடியாமல் உள்ளது” - என்றார். (இ)

## மன்னாரில் ஒருவர்...

னார் மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டிருந்தார்.

அவருடைய மாதிரி நேற்று யாழ். போதனா வைத்தியசாலையில் பி.சி.ஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபோது தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

## ரிஷாத்தின்...

பவம் தொடர்பில் பொரளை பொலிஸாரும், மேலும் இரு பொலிஸ் குழுக்களும் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றன.

அத்துடன், சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சும் விசேட விசாரணையொன்றை ஆரம்பித்துள்ளது.

## வர்த்தக...

குறித்த அறிக்கையில் அமெரிக்கா இதனை சுட்டிக்காட்டியுள்ளது.

உறுதிசெய்ய முடியாத பொருளாதார கொள்கை,அரசாங்க சேவைகளின் திறனற்ற சேவைகள், வெளிப்படையற்ற அரசாங்கத்தின் கொள்வனவு நடவடிக்கைகள் போன்றவற்றால் பரிவர்த்தனை செலவுகள் அதிகமாக காணப்படுகின்றன. ஒப்பந்தங்களை மதிக்காதிருத்தல் அதிகாரிகளாக நண்பர்கள் சகாக்களை நியமித்தல், போன்றவற்றின் காரணமாக முதலீட்டார்கள் கரிசனைகளை வெளியிடுகின்றனர் என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

ஊழலிற்கு எதிராக போராடுவதற்கு போதிய சட்டங்கள் உள்ளபோதிலும் அதனை நடைமுறைப்படுத்துவது பலவீனமாக உள்ளது. பாரிய உட்கட்டமைப்பு திட்டங்களில் ஊழல்கள் மற்றும் அரசாங்க கொள்வனவில் ஊழல்கள் காணப்படுவதாக கரிசனைகள் வெளியிட்டுள்ளன எனவும் அமெரிக்க அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## திருமண கொத்தணி...

அதிகபட்சம் 150 பங்கேற்பாளர்கள் அல்லது இருக்கை வசதியில் 25 சதவிகித மானவர்களுடன் திருமணங்களை நடத்த சுகாதார அமைச்சு அனுமதித்துள்ளது என்று அவர் கூறினார்.

இருப்பினும், மேற்கு மாகாணத்துக்கு வெளியே உள்ள பகுதிகளில் சிறப்பாக திருமணங்கள் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

“கட்டுப்பாடுகள் அல்லது வழிகாட்டுதல்களை மதிக்காமல் சில பகுதிகளில் திருமணங்கள் நடத்தப்படுவது மிகவும் துரதிர்ஷ்டவசமானது. 250 க்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்கள் கூட சில திருமணங்களில் கலந்துகொண்டதாக தெரிவிக்கப்பட்டது. அந்த கட்டுப்பாடுகள் மீறப்பட்டால் ஒரு ‘திருமண கொத்தணி’ வெளிப்படும் வாய்ப்பு உள்ளது“ என தெரிவித்தார்.

மக்கள் ஆலோசனையை தவறாகப் பயன்படுத்தினால் நிலைமை ஆபத்தானது என்று தளபதி கூறினார்.

வரவிருக்கும் நீண்ட வார இறுதியில் பொதுமக்கள் பொறுப்புடன் செயல்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

# யாழ்ப்பாணத்தில் 22 பேர் உட்பட வடக்கில் 54 பேருக்கு கொரோனா

யாழ்ப்பாணம், ஜூலை 23

யாழ். மாவட்டத்தினைச் சேர்ந்த 22 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் 54 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் 501 பேருக்கு நேற்று மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 03 பேர்,

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் 05 பேர்,

யாழ்.போதனா வைத்தியசாலையில் 04 பேர், (ஒருவர் பிறந்து 17 நாட்களேயான பெண் குழந்தை)

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 02 பேர்,

தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் 02 பேர்,

பண்டத்தரிப்பு பிரதேச வைத்தியசாலையில் 02 பேர்,

வேலணை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவர்,

நொதேர்ன் சென்றல் வைத்தியசாலையில் ஒருவர்,

வேலணை பிரதேச வைத்தியசாலையில் ஒருவர்,

சங்கானை பிரதேச வைத்தியசாலையில் ஒருவர்

வவுனியா மாவட்டத்தில் 07 பேர்

வவுனியா வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 07 பேர்,

முல்லைத்தீவு மாவட்டத்தில் 09 பேர்

ஒட்டுசுட்டான் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 05 பேர்,

மாந்தை கிழக்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 02 பேர்,

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் 02 பேர்,

கிளிநொச்சி மாவட்டத்தில் 10 பேர்

பூநகரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 05 பேர்,

அக்கராயன்குளம் பிரதேச வைத்தியசாலையில் 02 பேர்,

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் 03 பேர்,

மன்னார் மாவட்டத்தில் 03 பேர்

மன்னார் நகர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவர்,

மன்னார் மாவட்ட வைத்தியசாலையில் 02 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதுவேளை, புதுக்குடியிருப்பு தனிமைப்படுத்தல் நிலையத்தில் ஒருவர்,

முள்ளிவாய்க்கால் தனிமைப்படுத்தல் நிலையத்தில் ஒருவர்,

வசாவிளான் தனிமைப்படுத்தல் நிலையத்தில் ஒருவர், ஆகியோரும் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

## டெவோன் நீர்வீழ்ச்சியில் விழுந்த

# யுவதியைத் தேடும் பணி நேற்று 4ஆவது நாளாகவும் தொடர்ந்தது

பத்தனை, ஜூலை 23

தலவாக்கலை - பத்தனை, டெவோன் நீர்வீழ்ச்சியில் தவறி வீழ்ந்து காணாமல் போன யுவதியைத் தேடும் பணிகள் நேற்று நான்காவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டன.

எனினும், இதுவரை குறித்த யுவதி தொடர்பில் எந்தத் தகவலும் கிடைக்கவில்லை என்று திம்புளை - பத்தனை பொலிஸார் தெரிவித்தனர்.

டெவோன் நீர்வீழ்ச்சியில் நீரின் வேகம் அதிகரித்த காரணத்தால் நேற்றுமுன்தினம் தேடுதல் நடவடிக்கை பாதிக்கப்பட்டது.

இந்தநிலையில், நேற்றுக் காலை முதல் இராணுவத்துடன் பொலிஸாரும், பிரதேச மக்களும் இணைந்து யுவதியைத் தேடும் பணிகளில் ஈடுபட்டனர்.

நீர் வீழ்ச்சியின் அடிவாரத்தில் கடற்படை சுழியோடிகள் மேற்கொண்டு வரும் தேடுதலில் இதுவரை எந்தவித தடயங்களும் கிடைக்கவில்லை என்று பொலிஸார் கூறினர்.

நண்பர்கள் மூவருடன் நீர்வீழ்ச்சியைப் பார்வையிடச் சென்ற சந்தர்ப்பத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை குறித்த யுவதி வழுக்கி வீழ்ந்து காணாமல்போயுள்ளார்.

லிந்துலை, லென் தோமஸ் தோட்டத்தைச் சேர்ந்த 19 வயது யுவதியே இவ்வாறு காணாமல்போயுள்ளார்.

காணாமல்போன யுவதியுடன் சென்ற நண்பர்களிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடதக்கது.

பத்தனைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(இ)

ஈழநாடு
Eelanadu

## மரண அறிவித்தல்கள்



மலர்வு 10 - 05 - 1946
உதிர்வு 18 - 07 - 2021

### திருமதி இராசாத்தியம்மா தில்லைநாதன்

யாழ். புத்தூரைப் பிறப்பிடமாகவும், பிரித்தானியா லண்டனை வதிவிடமாகவும் கொண்ட இராசாத்தியம்மா தில்லைநாதன் அவர்கள் கடந்த (18.07.2021) ஞாயிற்றுக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்ற ஐயம்பிள்ளை – பரிமளம் தம்பதியரின் இளைய மகளும், காலஞ்சென்ற சண்முகசுந்தரம் – மங்கையற்கரசி தம்பதியரின் அன்பு மருமகளும், தில்லைநாதனின் அன்பு மனைவியும், குகனேசன் (கனடா), ஜலஜா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், நடராஜா, காலஞ்சென்ற சின்னத்துரை, இரத்தினம், கனகம்மா, தருமலிங்கம், இராசதுரை, குணசிங்கம், ராணியம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், கிருஜா, ஜெயபாலன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சாருஜன், ரம்யா, திவ்யா ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
குகனேசன் - மகன்
Mobile : +16479712074

தகவல்:
குடும்பத்தினர்



மலர்வு 05 - 04 - 1927
உதிர்வு 22 - 07 - 2021

### கணபதிப்பிள்ளை நடராஜா

யாழ். சட்டநாதர் வீதியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை நடராஜா அவர்கள் நேற்று (22.07.2021) வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை – அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பொன்னுத்துரை – செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், கேதீஸ்வரன், மனோரஞ்சினி, சுந்தரமூர்த்தி, யோகேந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், பொற்செல்வி, தர்மகுலசிங்கம், கலாநிதி வத்சலா ஆகியோரின் அன்பு மாமனாரும், மீனா, மேனன், டிலன், தனிஷென், தனிஷா, தாரணி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (23.07.2021) வெள்ளிக்கிழமை அன்று மு.ப 10.00 மணிமுதல் பி.ப 04.00 மணிவரை அவரது இல்லத்தில் நடைபெற்று செம்மணி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
யோகேந்திரன் - மகன்
Mobile : +447545218518

தகவல்:
குடும்பத்தினர்
இல. 89, சட்டநாதர் வீதி,
யாழ்ப்பாணம்.

# ஜனாதிபதியின் தந்தை வந்தாலும் கூட மக்கள் எதிர்ப்பலையை அடக்க முடியாது

## முன்னாள் எம்.பி. ஹிருணிகா தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 23

**ஜனாதிபதியின் தந்தை வந்தாலும் கூட மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள எதிர்ப்பலையை அடக்கி விட இயலாது என்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“தனிப்பட்ட அரசியல் நலன்களை மையப்படுத்திய அரசின் முறையற்ற செயற்பாடுகளால் நாட்டு மக்கள் பாரிய நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்திருக்கின்றார்கள். இவ்வாறானதொரு சூழ்நிலையில் மீண்டும் அடுத்த 5 வருட பதவிக் காலத்துக்காகப் போட்டியிடப்போவதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஆனால், அடுத்துவரும் தேர்தல்களில் அவரோ, பஸில் ராஜபக்ஷவோ மாத்திரமல்ல, அவரது தந்தை டி.ஏ.ராஜபக்ஷ வந்தாலும்கூட, தற்போது மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கும் எதிர்ப்புணர்வை இல்லாமல் செய்ய முடியாது.

அதுமாத்திரமன்றி, கொலைக் குற்றவாளி துமிந்த சில்வாவுக்கு ஜனாதிபதியால் வழங்கப்பட்ட பொதுமன்னிப்பின் விளைவாக நீதிமன்றத் தீர்ப்பு முற்றிலும் கேள்விக்குட்படுத்தப்பட்டிருக்கின்றது.

நாட்டின் சட்டம், பொலிஸ், நீதிமன்றம் உள்ளிட்ட அனைத்தும் ஜனாதிபதியின் கட்டளையை விடவும் மேலானவை அல்ல என்றால், அவை அவசியமில்லை அல்லவா?

தற்போதைய அரசு ஆட்சிபீடமேறியதிலிருந்து நாட்டிலுள்ள பெண்களும் சிறுவர்களும் தொடர்ச்சியாகப் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்கவேண்டிய நிலை யேற்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக பொதுமக்கள் ஏற்கனவே பல்வேறு நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்திருக்கும் சூழ்நிலையில், அரசின் முறையற்ற செயற்பாடுகள் அதனை மேலும் அதிகப்படுத்தியுள்ளன. அவற்றுக்குத் தீர்வைப் பெற்றுத்தருமாறு வலியுறுத்தி அண்மைக்காலத்தில் பொதுமக்கள் வீதிகளில் இறங்கித் தொடர்ச்சியாகப் போராடி வருகின்றார்கள்.

இவற்றுக்கு மத்தியில், அடுத்த பொலிஸ்மா அதிபராகும் கனவுடன் இருவர் தமது திறமைகளைப் போட்டிபோட்டுக்கொண்டு ஜனாதிபதியிடம் வெளிக்காட்டி வருகின்றார்கள். அவர்கள் அப்பாவிப் பெண்களிடமும் வயது முதிர்ந்தவர்களிடமும் தமது வீரத்தைக் காண்பிக்கின்றார்கள். அவர்கள் இருவருக்கிடையிலான போட்டியால் அப்பாவிப் பொதுமக்களே பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள்” - என்றார். (இ)



## யாழில் முதியவர் சடலமாக மீட்பு!

யாழ்ப்பாணம், ஜூலை 23

யாழ்ப்பாணம் நகரில் முதியவர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

யாழ். மத்திய பஸ் நிலையத்துக்கு முன்னால் உள்ள நடைபாதை கடைத்தொகுதி ஒழுங்கையிலேயே முதியவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

குறித்த சடலம் அடையாளம் காண்பதற்காகவும் பரிசோதனைகளுக்காகவும் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (இ - 03)

## மட்டு. மாநகர ஆணையாளருக்கு எதிரான விசாரணை ஒத்திவைப்பு

மட்டக்களப்பு, ஜூலை 23

மட்டக்களப்பு மாநகர ஆணையாளருக்கு எதிராக இடைக்காலத் தடை விதிக்குமாறு கோரி மாநகர மேயர் தாக்கல் செய்துள்ள எழுத்தாணை மனு மீதான விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் நீதிபதி எம்.என். அப்துல்லா முன்னிலையில் மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, நீதிமன்றத்தின் உத்தரவையும் மீறி ஆணையாளர் தொடர்ச்சியாக மேயரால் வழங்கப்பட்ட அதிகாரத்தில் தலையீடு செய்வதாக மாநகர மேயரின் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

இதனைக் கருத்தில்கொண்ட நீதிபதி, நீதிமன்றத்தால் வழங்கப்பட்டுள்ள இடைக்காலத் தடை உத்தரவை மட்டக்களப்பு மாநகர ஆணையாளர் மீறக்கூடாதென உத்தரவிட்டார்.

அத்துடன், நீதிமன்றத்தை அவமதிக்கும் நிலையை ஏற்படுத்தக்கூடாதென ஆணையாளரின் சட்டத்தரணி ஆணையாளருக்கு ஆலோசனை வழங்க வேண்டும் எனவும் அவர் உத்தரவிட்டார்.

இதையடுத்து, மனு மீதான விசாரணை அடுத்த மாதம் 19ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாநகர சபையால் ஆணையாளருக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் மீளப் பெறப்பட்ட போதிலும் அந்த அதிகாரங்களை அவர் தொடர்ச்சியாகப் பயன்படுத்துவதாகத் தெரிவித்து வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

மட்டக்களப்பு மாநகர மேயரால், மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் இந்த வழக்கு கடந்த மார்ச் மாதம் 26 ஆம் திகதி தாக்கல் செய்யப்பட்டது. (இ)

## காலி சிறைச்சாலை கைதி தற்கொலை!

கொழும்பு, ஜூலை 23

காலி சிறைச்சாலையின் கைதி ஒருவர் நேற்று அதிகாலை தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

மீட்டியாகொட பகுதியைச் சேர்ந்த 50 வயதான கைதியே இவ்வாறு தூக்கிட்டு தற்கொலை செய்துகொண்டுள்ளார் என்று சிறைச்சாலைகள் ஆணையாளர், ஊடகப்பேச்சாளர் சந்தன ஏக்கநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

வீடுகளில் திருட்டில் ஈடுபட்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருந்தவரே தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

26 வருடங்கள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள குறித்த குற்றவாளிக்கு எதிராக 15 வழக்குகள் நிலுவையிலுள்ளன.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக காலி - கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (இ)






இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 23.07.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திபாடல்
6.30 மணி : வணக்கம் டான்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
07.05 மணி : உளவியல் கருத்து-உளவள துனையாளர் திரு.நா.நவராஜ்
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகள்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை- நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : மாதம் ஒரு இசைக்குழு- மறுஒளிபரப்பு

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை




1.00 மணி : துறைக்கு அப்பால் (மறுஒளிபரப்பு)
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்- இப்படை வெல்லும் திரைப்படங்களிலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களுக்கான நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : Short Film
6.00 மணி : ஹொலிவுட் சுப்பர் 10




**இரவு**
7.00 மணி : ரசிகன் என்கின்ற தலைவன்- நகைச்சுவை நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம்- தீண்டாமை பகுதி-02



10.00 மணி : நேருக்கு நேர்

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : திரைப்படம்

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் வடிவேல் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : திரைப்படம்
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : திரைப்படம்
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப் பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்

**பகல்**
12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 சுற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
6.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த. சாதாரண தர மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி :செய்திகள்
7.30 மணி : அருளுரை

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபமாலை

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்சிந்தனை
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய சிறுவர் பாடல்
8.00 மணி : சற் வித் குட்டீஸ்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : வேர் கொள்
11.00 மணி : மனிதம்
11.30 மணி : சுக வாழ்வு

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : அன்னிஸா
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : சற் வித் குட்டீஸ்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : பாடல்
8.30 மணி : மனிதம் வித் றிஸ்வான்
9.00 மணி : Bayan
10.00 மணி : சீரிஸ்
10.30 மணி : கலந்துரையாடல்